பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஐப்பசி 22 வெள்ளிக்கிழமை (07.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 344

# புலிகளை முற்றாகத் தோற்கடித்து வன்னியை அரசு விரைவில் மீட்கும்!

## 'பட்ஜெட்' உரையில் ஜனாதிபதி சூளுரை



கொழும்பு, நவம்பர் 07

"புலிகளை முற்றாகத் தோற்கடித்து விரைவில் இராணுவத்தினர் வன்னிப்பகுதியை மீட்டெடுப்பர். கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளிலுள்ள மக்களை பயங்கரவாதப்பிடியிலிருந்து விடுவிக்கும் நாள் வெகுதொலைவில் இல்லை."

இவ்வாறு சூளுரைத்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 12.55 மணிக்கு சபாநாயகர் தலைமையில் நாடாளுமன்றம் கூடியது. ஒரு மணிக்கு ஜனாதிபதி சபைக்குள் வந்தார். உடனே வரவு-செலவு திட்டம் மீதான முதலாம் கட்ட வாசிப்பு தொடங்கியது. பட்ஜெட்டை சமர்பித்து ஜனாதிபதி உரையாற்றினார். அவர் தனது உரையில் தெரிவித்தவை வருமாறு:- வன்னியில்புலிகளின்பிடியில்சிக்கியுள்ளமக்களைமீட்கின்றமனிதாபிமான நடவடிக்கை இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில் நான் இங்கு உரையாற்றுகின்றேன். அரசியல் தீர்வுக்கான ஜனநாயக சூழல் மலர்ந்துவருகின்ற தருணத்தில் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். (04 ஆம் பக்கம் பார்க்க)

## அரச ஊழியருக்கு ரூ.1,000 சம்பள அதிகரிப்பு வற் வரியும், எரிபொருள் விலையும் குறைப்பு

### ஓய்வூதியம் 560 ரூபா உயரும்; தொலைபேசிக்கு 10 வீத வரி

நேற்று நிதி அமைச்சர் என்ற முறையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த வரவு - செலவுத்திட்டத்தில் அடங்கியிருந்த முக்கிய அம்சங்கள் வருமாறு:-

* அரச ஊழியருக்கான வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் ஆயிரம் ரூபாவால் அதிகரிக்கப்படும். அவர்களின் பண்டிகைக்கால முற்பணம் ஐயாயிரம் ரூபாவாக உயர்த்தப்படுகிறது.
* ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவு அலவன்ஸ் ரூ.560 ஆல் அதிகரிக்கப்படும்.
* கடமையில் இருக்கும் படையினரின் அலவன்ஸ் 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபாவாக உயர்கின்றது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## படையினருடன் சேருங்கள் வன்னி மக்களிடம் மஹிந்த

கொழும்பு, நவ. 07

பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களைப் பிரயோகித்து வருவது மனிதநேயத்தின் பெயரால் உங்களை மீட்பதற்காகவே. எனவே அவர்களுடன் ஒன்றுசேருமாறு கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த அப்பாவி மக்களிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன் .

இவாவாறு அழைப்பு விடுத்தார் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்புக்கு 'பட்ஜெட்'டில் அதிக நிதி வரவேற்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

### யுத்தத்தைத் தீவிரப்படுத்த அவருக்கும் ஆசையாம்!

கொழும்பு, நவ.7

அடுத்த வருடத்திற்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பிற்கென அதிகளவு நிதியை ஒதுக்குவதை தாம் ஆதரிக்கிறார் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

சர்வதேச செய்திச் சேவையொன்றிற்கு வழங்கியுள்ள பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் 25 வருடகால (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியிலிருந்து வருவோரைத் தங்கவைப்பதற்கு தெல்லிப்பழையில் நலன்புரி நிலையம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.7

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வரும் அகதிகளை தங்கவைப்பதற்காக தெல்லிப்பழையில் நலன்புரி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுக் கடற்பகுதியில் கடந்த 28 ஆம் திகதி படகுகள் மூலம் வந்தடைந்த 19 பேர் முதலில் இந்த முகாமில் தங்கவைக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பட்ஜெட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்க்கூட்டமைப்பினர் வெளிநடப்பு

கொழும்பு, நவ.7

ஜனாதிபதியால் நேற்று நாடாளுமன்றத்தில் வரவு செலவு திட்டம் வாசிக்கப்பட்ட போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

'பட்ஜெட்' உரையை ஜனாதிபதி ஆரம்பிக்க எழுந்த நேரத்தில் திடீரென எழுந்த கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் சிறிய அறிக்கை ஒன்றை வாசித்தார். அதனையடுத்து கூட்டமைப்பு எம்.பிக்கள் அனைவரும் சபையிலிருந்து (16 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தனில் விமானக் குண்டுவீச்சு 12 பொதுமக்கள் காயம்; வீடுகள் சேதம்

### புலிகள் இலக்கே தாக்கப்பட்டது என்கிறது படைத்தரப்பு

கொழும்பு,நவ.07

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பரந்தன் மக்கள் குடியிருப்புகள் மீது விமானப்படையினர் நடத்திய குண்டுத் தாக்குதலில் 12 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர். 4 வீடுகள் அழிந்துள்ளன. 11 வீடுகள் சேதமாகியுள்ளன. பரீட்சை எழுதிக்கொண்டிருந்த மாணவர்கள் சிதறி ஓடியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவலில் மேலும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## வைகோ, கண்ணப்பன் நேற்று விடுதலை!

சென்னை, நவ. 07

இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவிக்கும் வகையில் பேசினர் என்ற குற்றஞ்சாட்டில் கைது செய்யப்பட்ட ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோவையும், அக்கட்சியின் அவைத் தலைவர் மு. கண்ணப்பனையும் விடுதலை செய்ய ஜோர்ஜ் டவுன் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டதை தொடர்ந்து இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இருவரும் கடந்த மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டனர். சென்னையில் ம.தி.மு.க. சார்பில் "ஈழத்தில் நடப்பது என்ன?" என்ற பொருளில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய இவர்கள் இருவரும் இந்திய இறையாண்மைக்கு (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழருக்காக 2 ஆயிரம் தொன் பொருள்களை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளித்தார் கருணாநிதி

சென்னை, நவ.7

இலங்கை அரசின் இனப்படுகொலைக்கு உள்ளாகி வரும் ஈழத் தமிழர்களுக்காக 2 ஆயிரம் தொன் நிவாரணப் பொருள்களை அனைத்துலக செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி நேற்று வியாழக்கிழமை கையளித்தார்.

இதனைப் பெற்றுக்கொண்ட அனைத்துலக செஞ்சிலுவைக்குழுவிடம் அதிகாரி கூறுகையில் -

இந்த நிவாரணப் பொருள்களை இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரியிடம் கையளித்து செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக்குழு ஊடாக தமிழ் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

Lifeline
மீண்டும் வாழ்வோம்
சூரியன் அலைகளில் (யாழ்ப்பாணம் 93 Mhz)
சனிக்கிழமைகளில் காலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சியினை நீங்கள் கேட்கலாம்

உங்கள் கதைகளை கேளுங்கள்
உள் நாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான
மனிதாபிமான பணிகள் குறித்த தகவல்களை தாங்கி வருகின்றது
மீண்டும் வாழ்வோம் நிகழ்ச்சி. இது உங்களுக்காக
உங்கள் கதைகளை சொல்லும் ஒரு நிகழ்ச்சி
தொடர்புகளுக்கு மீண்டும் வாழ்வோம் த.பெ.இல 1039 கொழும்பு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ்ப்பாணம், மாநகரசபை

சந்தைகள், இறைச்சிக் கடைகள், கருவாட்டுக் கடைகள், கோழிக்கடைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2009

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 01.01.2009ஆம் திகதி முதல் 31.12.2009 திகதி வரையான காலப்பகுதிக்குக் குத்தகைக்கு வழங்குவ தற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

**கேள்விப் படிவக் கட்டணம் (வற் வரி நீங்கலாக)** - ரூ 400.00
**கேள்விப் படிவம் விநியோகிக்கும் திகதி** - 10.11.2008
**கேள்விப் படிவம் ஏற்றுக் கொள்ளல்** - 25.11.2008, நண்பகல் 12 மணிவரை
**கேள்வி திறத்தல்** - 25.11.2008, பிற்பகல் 2.30 மணிக்கு

விண்ணப்பப் படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மூலையில் கடையின் பெயர் குறிப்பிடப்பட்டு மநகரசபை நானாவித இறைவரிப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

தபாலில் அனுப்புவோர் மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பரணம் என்று முகவரியிட்டு 25.11.2008ஆம் திகதி நன்பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விக் காரர்கள் அல்லது அவர் சார்ப்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் சமுகமளிக்கலாம்.

**குறிப்பு:**

1) கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித் தொகையின் 50 வீதத்திற்ச் சமமான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவது ஒரு வங்கியின் முறி ஒன்று சமர்ப்பித்தல் வேண்டும்.

2) சந்தையை குத்தகைக்கு பெறுபவர் சந்தைக்கு வரும் பொருள்களின் மொத்தப் பெறுமதியில் 3 வீதம் கட்டணம் பெறலாம். வியாபாரிகள் மீன் வியாபாரம் செய்யும் இடத்துக்கு (கல்லுக்கு) ரூபா 40.00 பெறலாம். மேலதிகமாக எந்தவித கட்டணங்களும் அறவிடக்கூடாது.

3) சபையின் சைக்கிள பாதுகாப்பு நிலையங்களில் பாதுகாக்கப்படும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ரூபா 4.00 உம் மோட்டார் சைக்கிள்களுக்கு ரூபா 7.00ம் வாங்கலாம். மேலதிகமாக எந்த வரியும் அறவிடக்கூடாது.

4) சபையின் கடைகளில் இறைச்சி, கருவாடு, கோழி ஆகிய பொருள்கள் விற்பனை செய்யும் உரிமையாளர்கள் மாத வாடகை செலுத்த வேண்டும்.

5) சபையின் கடைகள் இல்லாத இடமாகிய மானிப்பாய் வீதி, ஜின்னா வீதி, பாசையூர் ஆகிய பகுதிகளுக்கு கேள்வி விண்ணப்பம் சமர்ப்பிப்பவர்கள் குறிப்பிட்ட இடங்களில் காணி உரிமையாளர்களின் சம்மதக் கடிதங்களையும் இணைத்தல் வேண்டும்.

6) கேள்விப் படிவக் கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு 15% பெறுமதி சேர் வரி (வற்) செலுத்துதல் வேண்டும்.

7) சித்தி பெற்றவர்கள் உடனடியாக கேள்வித் தொகையின் 1/3 பகுதியைச் செலுத்தி சபையுடன் உடன்படிக்கை செய்து கொள்ளவேண்டும். மிகுதித் தொகையின் 1/9 பங்கை 2009 தை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் முதலாம் திகதி செலுத்துதல் வேண்டும்.

8) கேள்வி விண்ணப்ப பத்திரம் பெற வருபவர்கள் அடையாள அட்டை சமர்ப்பிப்பதுடன் அதன் ஒளிப்படப் பிரதியும் சமர்ப்பித்தல் வேண்டும்.

9) சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை யாழ். மாநகர சபை ஆணையாளராகிய எனக்கு இருக்கிறது.

10) கேள்விப் படிவங்கள் பெறுபவர்கள் முன்பு மாநகர சபைக்கு எந்தவித கொடுப்பனவும் செலுத்த முடியாத காரணத்தால் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

மேலும் மேலதிக விவரங்கள் தேவைப்படின் அலுவலக நேரத்தில் யாழ். மாநகர சபையின் நானாவித இறைவரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 03.11.2008

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.

| தொ. இல | பொதுச் சந்தைகள் | மீளளிக்கக் கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|
| 01 | பண்ணை மீன் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 3500000.00 |
| 02 | பெரியகடை மரக்கறிச் சந்தை (துவிச் சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1500000.00 |
| 03 | குருநகர் சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 1000000.00 |
| 04 | செங்குந்தா சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 600000.00 |
| 05 | நாவாந்துறை சந்தை (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் உட்பட) | 10000.00 | 450000.00 |
| 06 | புங்கக் குளம் சந்தை | 2000.00 | 10000.00 |
| 07 | அரியாலைச் சந்தை | 1000.00 | 100000.00 |
| 08 | கச்சேரி நல்லூர் வீதி துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் (இல.11/2, கண்டுக்குளி தபால் கந்தோருக்கு அருகில்) | 1000.00 | 100000.00 |

| தொ. இல | இறைச்சிக் கடைகள் | கடை இல | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (15% பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 90000.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.03 | 5000.00 | 80000.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 115000.00 |
| 4 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 50000.00 |
| 5 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.06 | 5000.00 | 50000.00 |
| 6 | பண்ணை ஆட்டிறைச்சிக் கடை | இல.08 | 5000.00 | 40000.00 |
| 7 | பண்ணை கருவாட்டுக் கடை | இல.02 | 5000.00 | 30000.00 |
| 8 | பண்ணை கோழிக் கடை | இல.07 | 5000.00 | 40000.00 |
| 9 | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 120000.00 |
| 10 | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 140000.00 |
| 11 | அரியாலை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 195000.00 |
| 12 | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 40000.00 |
| 13 | புங்கக்குளம் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 110000.00 |
| 14 | புங்கக்குளம் ஆட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 50000.00 |
| 15 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 85000.00 |
| 16 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 110000.00 |
| 17 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.03 | 5000.00 | 55000.00 |
| 18 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 5000.00 | 70000.00 |
| 19 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 5000.00 | 70000.00 |
| 20 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 5000.00 | 70000.00 |
| 21 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 5000.00 | 70000.00 |
| 22 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.08 | 5000.00 | 70000.00 |
| 23 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.09 | 5000.00 | 70000.00 |
| 24 | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | இல.10 | 5000.00 | 10000.00 |
| 25 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.11 | 2000.00 | 10000.00 |
| 26 | நாவாந்துறை கருவாட்டுக் கடை | இல.12 | 2000.00 | 10000.00 |
| 27 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7000.00 | 130000.00 |
| 28 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 7000.00 | 130000.00 |
| 29 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.03 | 7000.00 | 130000.00 |
| 30 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.04 | 7000.00 | 130000.00 |
| 31 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.05 | 7000.00 | 130000.00 |
| 32 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.06 | 7000.00 | 130000.00 |
| 33 | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | இல.07 | 7000.00 | 100000.00 |
| 34 | நரிக்குன்று மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 7000.00 | 85000.00 |
| 35 | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 85000.00 |
| 36 | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | இல.02 | 5000.00 | 65000.00 |
| 37 | முஸ்லீம் கல்லூரி ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 5000.00 | 25000.00 |
| 38 | ஜின்னா வீதி ஆட்டிறைச்சிக் கடை | இல.01 | 2500.00 | 25000.00 |

## 'இந்து இளைஞன்' வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ.7

யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களின் இந்து இளைஞன் சஞ்சிகை வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திருமதி ஜோய் மகாதேவா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பார்.

ஆய்வுரையை கலாநிதி க.குணராஜா நிகழ்த்துவார்.

(203)

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், நவ.7

கடவுளின் குழந்தைகள் நிறுவனம் நடத்தும் விசேட பாடசாலையின் முத்தமிழ் விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிறுவனத்தில் விசேட பாடசாலையில் உளரீதியாகப் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சிறுவர்கள், மெல்லக் கற்கும் சிறுவர்கள் கற்றுவருகின்றனர்.

(202)

## பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 07

உடுவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் நூற்றாண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை சனிக்கிழமை பகல் 10.00 மணிக்கு பாடசாலை அதிபர் சி.நடராசா தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக உடுவில் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவியும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற கிராம அலுவலர் எஸ்.ஆர்.யேசுபாலன் தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீன சபைக் குரு அருள்திரு ஸ்டான்டலி சந்திரராஜன் ஆனல்ட்டும் கலந்து கொள்வர்.

(1-86)

## முத்துமாரி அம்பாள் ஆலயக் குருக்கள் சிவத்திரு - சோ.சந்திரசிகாமணிக் குருக்கள் அவர்களின் மணிவிழா வாழ்த்துச் செய்தி



தென்னை, பனை வளமுடன் செந்நெல் வயல்களும் சூழ்ந்திருக்கும் மந்துவில் பதியிலே ஒரு புறம் செந்நெல் வயல்களும் மறு புறம் மருதநிலமும் சூழ முத்துமாரி அம்பாள் கோயில் கொண்டுள்ளாள். முப்போதும் அவர் திருமேனி தீண்டி பூசை செய்பவர் சிவத்திரு. சோ. சந்திரசிகாமணிக்குருக்கள் அவர்கள். அவருடைய காலத்தில் பூசை நேரத்தை நேரமாகக் கொண்டு பூசைசெய்பவர் ஏழை, பணக்காரர் கற்றோர், கல்லாதோர் என்ற பாகுபாடின்றி அனைவரையும் நோக்குபவர். அவர் கோயிலின் ஊடாக சமூக, சமய கல்விப் பணிகளை மேற்கொண்டு வருபவர். அவரின் கல்விப் பணியின் ஓர் அங்கமே முத்துமாரி அம்பாள் அறிநெறிப் பாடசாலை ஆகும்.

இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை 60 வயதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் சிவத்திரு சோ.சந்திரசிகாமணி குருக்கள் நீண்ட ஆயுளும் சகல சௌபாக்கியங்களும் பெற்று இறைதொண்டாற்றி வாழ வேண்டும் என முத்துமாரி அம்பாளின் திருவடி பணிந்து வாழ்த்துகின்றோம்.

முத்துமாரி அம்பாள் அறநெறிப் பாடசாலை
மந்துவில் வடக்கு. (79690)

ஆசிரியர்கள்,
மாணவர்கள்,


# IIS
## கணனிக்கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க விசேட கட்டணச் சலுகையில் அனைத்துக்கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

| பிரிவுகள் | ஆரம்பம் | |
|---|---|---|
| பிரிவு 01. | → 07.11.2008 | காலை 10.00 மணி |
| பிரிவு 02. | → 08.11.2008 | காலை 10.00 மணி |

**Diploma Courses**
01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System.

**Certificate Courses**
01. Certificate in Auto CAD
02. Certificate in Java Programming
03. Certificate in Visual Basic Programming







INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No : 021 222 2831 Fax : 021 222 6933


# மரண அறிவித்தல்கள்

## பாலசுப்பிரமணியம் அமரசீலன் (அமரன் - சாரதி)

வேலணையைப் பிறப்பிடமாகவும் சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் அமரசீலன் நேற்று (06.11.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் ஜெயகௌரியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியம் - கிருஸ்ணாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும் அனோயன், அபிநயா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (79692)

தகவல்: மனைவி

## பரமலிங்கம் சரஸ்வதியம்மா



நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமலிங்கம் சரஸ்வதியம்மா நேற்று (06.11.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - இலட்சுமிப்பிள்ளை தமபதிகளின் மூத்த மகளும் நா.பரமலிங்கம் (இளைப்பாறிய பிரதம லிகிதர், இ.போ.ச, கோண்டாவில்) அவர்களின் அன்பு மனைவியும் துஸ்யந்தி (லண்டன்), ஸ்ரீஜெயந்தி (ஆசிரியை, குளமங்கால் றோ.க.வி, மல்லாகம் ), கிரிஷாந்தி (பிரதேச செயலகம், நல்லூர்), பிரஷாந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் வசந்தகுமார் (லண்டன்), அகிலன் (மக்கள் வங்கி), உமாசங்கர் (நூலகம், யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் மாமியாரும் ஜானிக்கா, கர்ணிக்கா, ஆரபி, ஆரூரன், அரங்கன், நிதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நவரட்ணசிங்கம், பாலசிங்கம், தவமணிதேவி, இந்திராணி ஆகியோரின் சகோதரியுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி. (79693)

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஐக்கிய அமெரிக்கத் தாராளம் வேறு இலங்கைப் பேரினவாதம் வேறு

தத்தமது நாடுகளில் நிலவும் பின்புலமே, இலங்கையிலும் நிலவுகின்றது என்ற கற்பனைச் சிந்தனையில்தான் இலங்கை விடயங்களை மேற்குலகம் அணுகுகின்றது; அவதானிக்கின்றது. அத்தகைய பிழையான பார்வையில் இலங்கை விவகாரங்களை நோக்கி அதன் அடிப்படையில் தீர்மானங்களை எடுப்பதனால்தான் தவறிழைக்கின்றன அந்த மேற்கு நாடுகள்.

இதுவே, இலங்கை இனப்பிரச்சினையில் பாதிக்கப்பட்ட தரப்பான ஈழத் தமிழர்களின் ஒரே ஆதங்கமாகும்.

இப்போதும் கூட, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்துள்ள கருத்தும், அவரும் இப்படித்தான் - தமது அமெரிக்க நாட்டின் பின்புலத்தில் நின்றபடி, அதே சூழல்தான் இங்கும் நிலவுகின்றது என்ற கற்பனைச் சிந்தனையில் மிதந்தபடியே - கருத்துக் கூறியிருக்கின்றார்.

சிறுபான்மைக் கறுப்பு இனத்தவரான பராக் ஒபாமாவைத் தமது தேசத்தின் ஒப்புயர்வற்ற பதவிக்கு - ஜனாதிபதி ஆசனத்துக்கு -பெருவாரி வாக்குகள் ஆதரவோடு தெரிவு செய்ததன் மூலம், இந்தப் பிரபஞ்சத்தின் உயர்ந்த மக்கள் கூட்டத்தில் தாங்களும் இடம்பெறுகின்றார்கள் என்ற பெருமையை அமெரிக்கர்கள் செயல். ரீதியாக நிரூபித்து உறுதிப்படுத்தியிருக்கின்றார்கள்.

அவர்களின் இந்த உயரிய விழுமிய எண்ணத்துக்காக - செயற்றிறனுக்காக - மாண்புமிக்க போக்குக்காக - முழு உலகமுமே இன்று அவர்களைப் போற்றித் தானும் பெருமிதம் கொள்கின்றது.

இத்தகைய தாராளப் பெரும்போக்கு உலகெங்கும் வியாபித்து நீடிக்க வேண்டும் என்ற அமெரிக்க மக்களினதும், கொழும்புக்கான அமெரிக்கத் தூதரினதும் எதிர்பார்ப்பை நாம் போற்றி விதந்துரைத்து, வரவேற்கிறோம்.

அதேசமயம், அத்தகைய தாராளப் போக்கு - சிறுபான்மையினரையும் அரவணைத்து நீதி செய்யும் உயரிய மனப்பக்குவம் - இலங்கையிலும் நிலவவேண்டும், ஏற்பட வேண்டும் என்ற அமெரிக்கத் தூதரின் விருப்பத்தையும் நாம் மகிழ்வோடு போற்றுகிறோம்.

ஆனால் அத்தகைய தாராளப் போக்கும், சிறுபான்மையினரை அரவணைக்கும் உயர்பண்பும் அமெரிக்கா போன்று இந்த இலங்கைத் தீவிலும் நிலவுகின்றது என்ற சாரப்பட அவர் கற்பனாவாதத்தில் கருத்துக் கூறுவதைத்தான் எம்மால் ஏற்றுக்கொள்ளவோ சகித்துக்கொள்ளவோ முடியவில்லை.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான பராக் ஒபாமா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை போல இலங்கையிலும் தமிழர் அல்லது முஸ்லிம் ஒருவர் ஜனாதிபதியாகலாம் என்று தூதுவர் பிளேக் நம்பிக்கை வெளியிட்டமையைத்தான் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை.

அமெரிக்க மக்கள் சிறுபான்மைக் கறுப்பு இனத்தவரான பராக் ஒபாமாவைத் தமது நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்வு செய்தமை போல, இலங்கையில் சிறுபான்மையினரான தமிழர் அல்லது முஸ்லிம்களில் இருந்து ஒருவரை உங்கள் நாட்டின் ஜனாதிபதியாக்கும் திராணி - தைரியம் - தாராளம் - விவேகம் - பெருந்தன்மை என்பன உங்களிடம் உள்ளனவா என்று, இலங்கைச் சிறுபான்மையினரை தமது அதிகார, ஆயுத பலத்தால் அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தும் பேரினவாதிகளான சிங்களவர்களைப் பார்த்துக் கேட்பதுதான் நீதி. நியாயமான செயற்பாடு.

இலங்கையில் பெரும்பான்மைச் சிங்களவர் போலத்தான் அமெரிக்காவில் 75.1 வீதத்தினர் வெள்ளையர். அதே போன்று இலங்கையில் சிறுபான்மைத்தமிழர்கள் மாதிரி 12.3 வீதத்தினர் பராக் ஒபாமாவின் கறுப்பினத்தவர் அல்லது ஆபிரிக்க அமெரிக்கர்.

பல இனத்தவரையும், பல சமூகத்தவர்களையும், பல தரத்தினரையும், பல வகுப்பினரையும் வேறுபாடின்றி, அரவணைத்து, சமமாக மதித்து, கௌரவமான வாழ்வுரிமையை அவர்களுக்குத் தந்து நிற்கின்றது அமெரிக்கா.

அதேநேரம், அந்தந்த மக்கள் கூட்டத்துக்கு - அந்தந்த சமூகத்துக்கு - அந்தந்தப் பிரதேச சமுதாயங்களுக்கு - அதிகாரங்களைப் பகிர்ந்து, உயரிய வாழ்வுரிமை அந்தஸ்தை அளித்து மகிழ்கின்றது அத்தேசம். அதனால்தான் வேறுபட்ட இனங்கள், வேறுபட்ட வழக்காறுகள், வேறுபட்ட வாழ்க்கை முறைகள், வேறுபட்ட சட்டங்கள், வேறுபட்ட கட்டமைப்புகளைக் கொண்டு தனித்தனியாக இயங்கும் சுமார் ஐம்பது மாநிலங்கள், ஐக்கிய அமெரிக்க இராச்சியமாக ஒன்றுபட்டு நிற்கின்றன.

அத்தகைய கௌரவ வாழ்வுரிமையும் அதிகாரப் பகிர்வும் சிறுபான்மையினருக்கு மறுக்கப்பட்டதால்தான் இலங்கை போன்ற சிறிய நாடுகள் பிளவுபடும் இக்கட்டின் விளிம்பை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன.

இந்த யதார்த்தம் அமெரிக்கத் தூதருக்குத் தெரியாததல்ல; புரியாததல்ல. ஆனால் அவர் வகிக்கும் இராஜதந்திரப் பதவி இந்த நிதர்சன உண்மையை அப்பட்டமாக - வெளிப்படையாக - பேசவிடாது அவரைத் தடுத்து முட்டுக்கட்டை போடுகின்றது என்பதையும் எம்மால் புரியவே முடிகிறது.

சிறுபான்மை இனத்தவர் ஒருவர் இலங்கைத் தீவின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகும் அமெரிக்கத் தூதரின் கனவை விடுவோம். ஜனாதிபதிக்கு அடுத்த பிரதமர் பதவிக்காவது சிறுபான்மை இனத்தவர் வரமுடியுமா என்பதே கேள்வி.

2004 ஏப்ரலில் அத்தகைய சந்தர்ப்பம் வாய்த்தபோது - தமிழரான லக்ஷ்மன் கதிர்காமர் பிரதமராகும் சந்தர்ப்பம் வந்தபோது - பெரும்பான்மை இனச் சிங்களவர் தாம் என்ற சாதக நிலையைக் காட்டி, தமிழருக்கு அப் பதவியைக் கிடைக்கவிடாது தட்டிப்பறித்தவர் யார்?

அமெரிக்கத் தூதர் இக் கேள்விக்கு விடை காணுவாராயின் -

அமெரிக்காவில் 13 வீதத்துக்கு உட்பட்டவர்களான கறுப்பு இனச் சிறுபான்மை மக்களில் இருந்து ஒரு ஜனாதிபதி தெரிவாகும் தாராளம் அங்கிருந்தாலும் -

இலங்கையில் இருபது வீதத்துக்கு உட்பட்டவர்களான தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த சிறுபான்மையினர் தரப்பிலிருந்து ஒருவர் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ வரவே முடியாது, அதற்குப் பேரினவாதம் இடமேயளிக்காது என்பதை இலகுவாகப் புரிந்துகொள்வார்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழர் ஒருவருக்குக் கிட்டியமையையே சகிக்க முடியாது, அப்பதவியிலிருந்து அவரைத் துரத்துவதற்காகப் பேரினவாதம் எண்பதுகளில் எப்படி நடந்துகொண்டது என்ற வரலாற்றுப் பாடமும் இங்கு மறைக்கற்பாலதல்ல.

# கிழக்கு மாகாண இலக்கியப் பெருவிழாவில் எட்டுப் படைப்பாளிகளுக்கு விருதுகள்

அம்பாறை, நவ.7

கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்முனையில் நடத்தவிருக்கும் இந்த வருடத் துக்கான தமிழ் இலக்கியப் பெருவிழாவின், பல்துறை, கலை இலக்கிய கர்த் தாக்கள் எட்டுப்பேர் கிழக்கு மாகாண கலை இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெறவிருக்கும் இந்த தமிழ் இலக்கியப் பெருவிழாவில் எட்டுப் பேரும் கௌரவிக்கப்படவுள்ளனர் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கு.திலகரெட்ணம் அறிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த வயலின் வித்துவான் வே.சங்கரலிங்கம், கே.எம்.முகம்மது மரைக்காயர் (மூதூர்), காளியப்பு வீரசிங்கம் (கட்டைபறிச்சான்) ஆகியோரும் மட்டக் களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.எதிர் மனசிங்கம் (ஓய்வுபெற்ற மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர்), ஆமுசிலேழகன்(வாழைச்சேனை) ஆகியோரும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கலாநிதி அருட்.சகோதரர் எஸ்.ஏ. ஐ.மெத்தியூ (ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்), சிரேஷ்ட ஊடகவியலாளர் 'சாஹித் தியசூரி' ஏ.எல்.எம்.சலீம் (நிந்தவூர்), மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத் (ஓய்வு பெற்ற மாகாண பண்பாட்டு திணைக்கள முஸ்லிம் பிரிவு உதவிப் பணிப்பாளர்) ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை மேற்படி தமிழ் இலக்கிய விழாவில் கிழக்கு மாகாண இலக் கிய நூல் பரிசுக்கான விருது பெறுபவர்களின் விவரங்களும் வெளியிடப்பட்டுள் ளன. அவை வருமாறு:-

கவிதை-'திமிலைத் துமிலன் கவி தைகள்'-திமிலைத் துமிலன், சிறுகதை- 'வரால்மீன்கள்'- ஜனாப்.எம்.ஏ. அமானுல்லா, சிறுவர் இலக்கியம்- 'மரம் வெட்டியும் ஒரு தேவதையும்'- ஓ.கோ. குணநாதன், நாடகம்- 'பொதி'- இ.ருசாந்தன், ஆய்வு- 'அனர்த்த முகாமைத்துவம்'- வெ.தவராஜா, 'இலங்கை கிராமத்து முஸ்லிம்களின் தாலாட்டுப் பாடல்கள்'- ஜனாப். எஸ்.முத்துமீரான், உயர்கல்வி (பல்துறை)- 'முரண்பாடும் சமாதானமும் ஓர் அறிமுகம்' -வே.குணரெத்தினம், கலை (பல்துறை) -'தொழில் நுட்பக் கலைகள்- அறிமுக விளக்கம்' -எஸ். மோசஸ், பொது (பல்துறை) -'இயற்கை அனர்த்தங்களும் இடர் முகாமைத்துவமும்'-திருமதி கே.இராதாகிருஷ் ணன்.

இவர்களுக்கான பரிசில்களும் இந் நிகழ் வில் வைத்து வழங்கப்படவுள்ளன. (203)

# பொதுச்சுகாதார வெளிக்கள உதவியாளர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

## விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ.7

வடமாகாணத்தில் நிலவும் பொதுச் சுகாதார வெளிக்கள உதவியாளர் பதவிகளில் நிலவும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

இதற்கெனத் தகுதியான ஆண் விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் ஜி.சீ.ஈ.உயர்தர விஞ்ஞானப் பிரிவில் சித்தி பெற்றிருப்பதுடன் 18 வயதுக்கும் 40 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பார்வையிடுவதுடன் விண்ணப்பப் படிவங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 05 ஆம் திகதிக்கு முன்னர் 'பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர், 572/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்' என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பக் கடிதத்தில் இடது பக்க மேல் மூலையில் 'பொதுச் சுகாதார வெளிக்க உதவியாளர் பயிற்சிநெறி ஆள் சேர்ப்பு- 2008' என குறிப்பிடப்பட வேண்டும்.

ஏற்கனவே இந்தப் பயிற்சிநெறிக்கு விண்ணப்பித்தவர்களும் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டும் என்றும் சுகாதாரப் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (203)

# வெளியிணைப்பு இயந்திரங்களைத் திருத்தும் பயிற்சி நிலையம் காரைநகரில் அமைப்பு

யாழ்ப்பாணம், நவ.7

படகு வெளியிணைப்பு இயந்திரங்களைத் திருத்துவதற்கான பயிற்சி நிலையம் ஒன்று காரைநகர்ப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.

கனேடிய உலகப் பல்கலைக்கழகத்தின் நிதி உதவியுடன் காரை அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் இந்தப் பயிற்சி நிலையத்தை அமைக்கவுள்ளது.

இதற்கென கனேடிய உலகப் பல்கலைக்கழகம் 5 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

தற்போது பயிற்சி நிலையம் அமைப்பதற்கான இடம் தெரிவு செய்யப்பட்டுக் கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விரைவில் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு பயிற்சி ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, யாழ்.தொழில் திணைக்களமும் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையும் இணைந்து காரைநகர் பிரதேசத்தைச் சேர்ந்த 20 இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (203-224)

# தேசிய சேமிப்பு வங்கியின் அஞ்சல் கிளை இம்மாத இறுதிமுதல் யாழ்ப்பாணத்தில்

மந்திகை, நவ.7

அனுராதபுரத்தில் இதுவரை காலமும் இயங்கி வந்த தேசிய சேமிப்பு வங்கியின் வடமாகாண அஞ்சல் கிளையை இந்த மாத இறுதி யாழ்ப்பாணத்தில் இயங்கச் செய்வ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய சேமிப்பு வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் எஸ்.ஈஸ்வரலிங்கம், வடவலய முகாமையாளர் எஸ்.சிவராஜா ஆகியோர் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

யாழ்.நாவலர் வீதியில் இந்தக் கிளையை அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள கட்டடப் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்து வருவதாகவும் அது விரைவில் திறந்து வைக்கப்பட்டு சேவைகள் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் முதலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கிவரும் தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் அஞ்சல் நடவடிக்கைகள் துரிதமாக செயற்படுத்தப்படவுள்ளன.

தொடர்ந்து மன்னார், வவுனியா மாவட்டங்களுக்கான சேவையும் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-218)

# வேலணைப் பிரதேச சபையின் பொது நூலகத்தை ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து வைக்க ஏற்பாடு

நல்லூர், நவ.7

வேலணைப் பிரதேச சபையின் பொது நூலகத்தை மாணவர்களின் நலன்கருதி ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்து மக்கள் பயன்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் இதற்கான அங்கீகாரத்தை வேலணைப் பிரதேச சபைக்கு வழங்கியுள்ளார்.

தற்போது இந்த நூலகம் ஞாயிற்றுக்கிழமைகளில் பொது மக்களின் பாவனைக்காகத் திறந்து வைக்கப்படுவதில்லை.

இதனால், விடுமுறை மாணவர்கள் நூலகத் தைப் பயன்படுத்த முடியாது பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவ தாகச் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனையடுத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் நூலகத்தைத் திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (203-111)

# வலிகாமம் பகுதியில் நெற்பயிர்களுக்கு கிணறுகளில் இருந்து நீர் பாய்ச்சப்படுகிறது

சுன்னாகம், நவ.7

வலிகாமம் பகுதிகளில் செய்கை பண்ணப்பட்டுள்ள நெற்பயிர்களுக்கு கிணறுகளில் இருந்து நீர் பாய்ச்சப்பட்டு வருகின்றது.

பிந்திப் பெய்ய ஆரம்பித்த பருவ மழையால் புழுதி விதைப்பு மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்ட விவசாயிகள் நாற்று நடுதல் மூலம் நெற்செய்கை மேற்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மழை பெய்யாமையால் கவலையடைந்துள்ள விவசாயிகள் வயல் கிணறுகளில் இருந்து பயிர்களுக்கு நீர் இறைத்து வருகின்றனர்.

எனினும் கிணற்று நீர் போதியதாக இல்லை என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

போதிய தண்ணீர் இன்மையால் நெற்பயிர்கள் வாடிக் காணப்படுவதுடன் அவை கருகும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (203-38)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 23 | 08.11.2008 சனிக்கிழமை |
| திதி: | தசமி மு.இ.07.05 வரை |
| நட்சத்திரம் : | சதயம் பி.ப.02.53 வரை |
| சுபநேரம் : | 03.05-4.35 |
| ராகுகாலம் : | 09.05-10.35 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் பருத்தித்துறை நீதிமன்றால் 'சீல்' வைக்கப்பட்டது

மந்திகை, நவ.7

பருத்தித்துறை பஸ்நிலையப் பகுதியில் சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய உணவகம் ஒன்று பருத்தித்துறை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 'சீல்' வைத்து மூடப்பட்டுள்ளது.

அத்துடன் உணவக உரிமையாளருக்கு 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் பரிசோதனையின் போது சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிய இந்த உணவகம் கண்டு பிடிக்கப்பட்டது.

சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட உணவகக் கட்டடம், மூடப்படாத நிலையில் வைக்கப்பட்டிருந்த உணவுகள், உணவகத்தின் பின்புறம் தேங்கி நின்ற தண்ணீர் துர்நாற்றம் வீசியமை போன்ற காரணங்களால் சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்ட உணவகத்திற்கு எதிராக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை விசாரணை செய்த பருத்தித்துறை நீதிவான் ப.அரியநாயகம் உடனடியாக கடையை 'சீல்' செய்யுமாறு உத்தரவிட்டதுடன் கடை உரிமையாளருக்கு10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

குறிப்பிட்ட உணவகக் கட்டடம் 6 மாத காலத்துக்குள் சுகாதார முறைப்படி திருத்தம் செய்யப்படவேண்டும் எனவும் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதி வழங்கிய பின்னரே உணவகத்தை மீண்டும் திறக்க முடியும் என்றும் நீதிபதி மேலும் உத்தரவிட்டார். (203-218)

## திருச்சியில் பல்லவர் காலத்து ஐயனார் சிலை கண்டுபிடிப்பு



திருச்சி அருகே கி.பி. 8ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல்லவர் கால ஐயனார் சிலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தொல்லியல் ஆய்வாளர் குடவாசல் பாலசுப்பிரமணியன் திருச்சி மாவட்டம் காட்டுப்புத்தூர் நத்தம் பகுதியில் குழுவினருடன் ஆய்வு மேற்கொண்டார். அங்கு 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய தொல்பொருள் தடயங்களும், 1200 ஆண்டுகளுக்கு முற்பட்ட பல்லவர் காலச் சிற்பங்களும் பல இடங்களில் புதைந்த நிலையில் இருப்பதை அவர்கள் கண்டனர்.


இதுபற்றி பாலசுப்பிரமணியன் கூறியவை -

8-9ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த மிகப் பெரிய ஐயனார் சிற்பம் புதைந்த நிலையில் உள்ளது. அதன் மார்பு, கைகளில் அணிகலன்கள் அணிந்தும், மார்பில் புரிநூலுடன் அமர்ந்த நிலையில் ஐயனார் சிற்பம் உள்ளது.

பல்லவர் கால லிங்கம், இடபம், திருமால் ஆகிய சிற்பங்களும் உடைந்த நிலையில் காணப்படுகின்றன. சோழர் காலத்துக்கு முன் பல்லவர் காலத்திலேயே இப்பகுதி வளமிக்கதாக திகழ்ந்திருந்தது என்பதற்கான சான்றுகள் பல உள்ளன.

ஐயனார் சிற்பத்தை சிதைவு ஏற்படாமல் வெளியே எடுத்து பாதுகாத்தால் எதிர்காலத்தில் அது கலை வரலாற்றுச் சின்னமாகத் திகழும் - என்றார்.

# ஈழத்தமிழர் பிரச்சினையில் கருணாநிதி கைவிரிப்பு



சென்னை, நவ.7

**சுடர் விட்டெரிந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினையில் தன்னால் தனித்து ஒன்றும் செய்ய முடியாது - என்று முதலமைச்சர் கருணாநிதி கைவிரித்துள்ளார்.**

**இந்தப் பிரச்சினையில் எவை எவை சட்ட விரோதமான செயல்களோ அவற்றிலே சிலர் ஈடுபட்டு தமிழக அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தி வருகின்றனர் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.**

இதுதொடர்பாக நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையின் விவரம் வருமாறு-

இலங்கையில் நடைபெறும் தமிழ் இனப் படுகொலை, நாற்பது ஆண்டு கால வரலாற்றுக்குரிய தொடர் நிகழ்ச்சியாகி விட்டது. அதைத் தடுத்து நிறுத்தித் தமிழர்க்கு உரிமை பெற்றுத் தர போர்க்கோலம் பூண்டவர்கள், பகைவர்கள் மீது பாய்ந்திடாமல், சகோதர யுத்தம் நடத்துவதிலேயும் அவற்றில் மாண்டு மடியும் தமது பழைய களத் தளபதிகளுக்கு சமாதிகள் அமைத்திடும் பணியிலேயும் காட்டிய விறுவிறுப்பை இன ஒற்றுமையில் காட்டத் தேவையில்லையென்றே கருதிச் செயல்பட்டு - தமது இனம் அறவே செத்து மடிவது குறித்து அக்கறையற்றே இருந்து விட்டனர்.

அதிர்ச்சிதரத் தக்கதும் ஆறாத் துயரம் அடையத் தக்கதுமான நிகழ்வுகள் இலங்கை மண்ணில் நித்தியத் 'திருவிழா'க்கள் ஆகி; இறுதிக் கட்டமாக அமைந்துள்ள இன்றுள்ள சோகநிலை; உலகத் தமிழர்கள் அனைவரும் அறிந்ததே. இன்றைய நிலைக்கு முடிவு காண எடுத்திடும் முயற்சி என் ஒருவனால் மட்டுமே முற்றுப் பெறக் கூடியதல்ல! இதை உணர்ந்திருப்போர் கூட நான் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருப்பதால் என்னால் தனித்து நின்று வெற்றி பெற முடியும் என்று தவறாக எண்ணுகிறார்கள்; அல்லது தவறாகக் கூறுகிறார்கள்.

'இந்திய நாட்டின் ஒற்றுமைக்கு, ஒருமைப்பாட்டுக்கு விரோதமாக எதுவும் பேசுவோம், எங்களுக்கு வேண்டியது இலங்கையில் தமிழ் ஈழம் தான்' என்கிற அவர்களின் பேச்சும், எழுத்தும் எனக்குப் புரிகிறது.

ஆனால் இங்குள்ள அரசியல் கட்சிகளுக்கிடையே அலை மோதும் எதிர் விமர்சனங்களையும் ஓர் அரசு; சிந்தித்துச் செயல்பட வேண்டியிருக்கிறதல்லவா? அவற்றை அலட்சியப் படுத்த முடியாதல்லவா? முதலில் அத்தகைய சட்டக் கட்டுப்பாடுகளை உடைக்கும் விதமாகப் பேசுகிறார்கள்.

சட்ட ரீதியாக அதன் மீது நடவடிக்கை எடுத்திட நேர்ந்தால், 'கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக் கெதிராக நடந்து கொள்கிறார்' என்று என் மீது பெரும் பழி சுமத்துகிறார்கள். சாதனைகள் புரியும் ஆட்சி என்பதற்குச் சான்றாக அமைந்துள்ள அடுக்கடுக்கான திட்டங்களும், அவற்றின் செயல்பாடுகளும் அவை தொடர்பான புள்ளி விவரங்களுமே போதுமானவை என்ற மன நிறைவு எனக்கிருந்தாலும்; எனக்கும், என் தலைமையில் உள்ள ஆட்சிக்கும் எப்படியோ ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும் என்று தீர்மானித்து, எவையெவை சட்ட விரோதமான செயல்களோ, அவற்றிலே ஈடுபட்டு தமிழக அரசுக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தும் தந்திரத்தைக் கையாண்டு வருகிறார்கள்.

இந்தப் பிரச்சினையில் சுதந்திரமாகச் செயற்பட வருக என்று என்னைக் காட்டிலும் வீரமிக்க தமிழர்களை அழைப்பதோடு நான் ஒதுங்கி நின்று விடாமல்; அவர்களுடன் இணைந்து பணியாற்றுவேன் என்றும் உறுதி கூறி என்னுடனிருந்து துணை நிற்கும் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன்.

இந்திய அரசு என் வேண்டுகோளையும், அனைத்துக் கட்சி தலைவர்களின் கூட்டத்தின் தீர்மானங்களையும் படிப்படியாக நிறைவேற்ற முனைந்ததற்கு சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன் சிங், வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கும் -

இலங்கைத் தமிழர்களுக்கு மருந்து, உணவு, உடை ஆகியவற்றை செஞ்சிலுவை சங்கம், ஐ.நா. சபை ஆகியவற்றின் மூலம் வழங்க இதுவரை 8 கோடி ரூபா அளவுக்கு நிதி வழங்கிய தமிழர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வழங்குமாறு வேண்டுகிறேன்.

நான் தெரிவித்துள்ள இந்தக் கருத்துக்கள் இலங்கைத் தமிழர்களின் காயத்திற்கும், இங்குள்ள சில தலைவர்களின் எரிச்சலுக்கும் தக்க சிகிச்சைக்கான மருந்தாகட்டும். அவர்களின் நலிவு தீர்த்திட ஒரு வகையில் நாம் பயன்படுகிறோம் என்கின்ற மன நிறைவுடன் என்றும் போல் தமிழ்த் தொண்டு, தமிழினத் தொண்டு தொடர்வோம் -என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## அமீர்-சீமானின் பிணையை ரத்துச் செய்யக் கோரி மதுரை உயர்நீதிமன்றில் காங். சட்டத்தரணி மனு

மதுரை, நவ.7

இயக்குநர்கள் அமீர், சீமானின் பிணையை ரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி மதுரை உயர்நீதிமன்றில் காங்கிரஸ் சட்டத்தரணி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

காங்கிரஸ் சட்டத்தரணிகள் பிரிவின் அமைப்பாளரான முத்துபாண்டி என்பவர் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் 'ரிட்' மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு-

தமிழ் சினிமா இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள் சார்பில் ஈழத் தமிழர்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து கடந்த மாதம் 19ஆம் திகதி இராமேஸ்வரத்தில் பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம் நடந்தன. அப்போது இயக்குநர்கள் அமீர், சீமான் ஆகியோர் இந்திய இறையாண்மைக்கு எதிராகவும், ஒருமைப்பாட்டுக்கு கேடு விளைவிக்கும் வகையிலும் பேசினர்.

இதையடுத்து கியூ பிரிவுப் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கடந்த 27ஆம் திகதி சென்னையில் இருவரையும் கைது செய்தனர். அவர்கள் மீதான குற்றச்சாட்டுகள் குறித்து முறையாக விசாரணை நடத்தாமல் 2 பேருக்கும் பிணை வழங்கி நீதிபதி உத்தரவிட்டார்.

என்ன காரணத்துக்காக பிணை வழங்கப்பட்டது என்றும் அவர் தனது உத்தரவில் கூறவில்லை. இயக்குநர்களின் பேச்சு தேச ஒற்றுமைக்கு எதிராகவும், சட்டத்துக்கு புறம்பான நடவடிக்கைகளுக்கு தூண்டுகோலாகவும் இருந்தது. அதனை கருத்தில் கொள்ளாமல் சாதாரண குற்றத்துக்காக வழங்குவது போல பிணை வழங்கப்பட்டு உள்ளது.

காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி இலங்கை இராணுவத்துக்கு ஆயுதங்கள் கொடுக்கிறார் என்று அமீர் பேசியுள்ளார். பிணை விடுதலைக்குப் பிறகும் இருவரும் அது போலவே பேசி வருகிறார்கள். அது தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரிப்பதாக உள்ளது. இதுபோல பேசுவது நாடுகளுக்கு இடையே பிரச்சினைகளை ஏற்படுத்தும். எனவே, அவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்ட பிணையை உடனடியாக ரத்துச் செய்ய வேண்டும் - என்றுள்ளது.

## அரச ஊழியருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ தற்போது கையடக்கத் தொலைபேசிகள், கம்பியில்லாத் தொலைபேசிகள் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்டுள்ள பத்துவீத வரி இனித் தரைவழித் தொடர்பு தொலைபேசிகளுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றது. இதனால் இனி எல்லாத் தொலைபேசிக் கட்டணங்களுக்கும் மேலதிகமாக பத்துவீத வரி செலுத்தவேண்டியிருக்கும். எனினும் போரில் உயிரிழந்த படையினரின் துணைவியர் மற்றும் அங்கவீனமுற்ற படையினர் போன்றோரின் தொலைபேசிகளுக்கு இந்த வரி விதிப்பு இல்லை.

★ டீஸல் ஒரு லீற்றர் 30 ரூபாவாலும், மண்ணெண்ணை ஒரு லீற்றர் 20 ரூபாவாலும், பெற்றோல் ஒரு லீற்றர் 15 ரூபா வாலும் உடனடியாக விலை குறைக்கப்படுகின்றது. இதனால் போக்குவரத்து பஸ் கட்டணம் 25 வீதம் வரையில் குறையும். எதிர்காலத்தில் சர்வதேச சந்தையில் எரி பொருள் விலைகள் குறைந்தால் மேலும் விலைக் குறைப்புப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

★ பெறுமதி சேர் (வற்) வரி அடுத்த ஜனவரி மாதம் தொடக்கம் பொதுவாக 15 வீத்திலிருந்து 12 வீதமாகக் குறைக்கப்படுகின்றது. எனினும் உந்துருளிகள், சொகுசுப் பொருள் கள், மதுபானம் போன்றவற்றுக்கான வற் வரி 20 வீதமாக இருக்கும்.

★ மோட்டார் வாகன இறக்குமதிக்கான வரிவிதிப்பு நூறு வீதம் உயரும்.

★ இறக்குமதியாகும் மாவுக்கு ஐந்து வீதத் தீர்வை விதிக்கப்படும்.

★ மின்சாரக் கருவிகளுக்கான 'செஸ்' வரி ஐம்பது வீதத்தால் உயரும்.

### வடபகுதி அபிவிருத்திக்கு 300 கோடி ரூபா

★ வட பகுதி அபிவிருத்திக்கு 300 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மருத்துவமனைக் கட்டடங்களை அடுத்த வருடத்தில் அமைக்கக் கூடியதாக இருக்கும்.

★ உரத்துக்கு 96 வீத மானியம் வழங்கப்படும்.

★ 'மிஹின் லங்கா' விமான சேவையை ஆரம்பிக்கவும், வீரவில விமான நிலையக் கட்டமைப்புக்கும் அறுநூறு கோடி ரூபா ஒதுக்கீடு.

★ அரச ஊழியர்களின் இடர்காலக்கடன் இரண்டரை லட்சம் ரூபாவாக உயர்வு.

★ தனிநபர் வருமானத்துக்கான வரி விதிப்புத் தொடர்பில், வருடவரி வருமானம் 3 லட்சம் ரூபாவரை வரி விதிப்பு இருக்காது.

★ நகர்ப்புற விளையாட்டுத்துறை அபிவிருத்திக்கு 30 கோடி ரூபா ஒதுக்கீடு.

★ ஆயிரம் மினி கூட்டுறவு சந்தைகளை அமைப்பதற்காக 30 கோடி ரூபா ஒதுக்கப்படுகிறது.

★ துறைமுகத் தீர்வை 3 வீதத்திலிருந்து 5 வீதமாக உயருகின்றது. (சி)

## 'பட்ஜெட்'டின் முக்கிய அம்சங்கள்

★ டீஸல் - ரூ. 30 குறைப்பு.

★ ம.எண்ணெய் - ரூ.20 குறைப்பு.

★ பெற்றோல் - ரூ. 15 குறைப்பு.

★ 'வற்' வரி 15 வீதத்திலிருந்து 12 வீதமாகக் குறைப்பு.

★ சகல தொலைபேசிகளுக்கும் 10 வீத வரி.

★ மாவுக்கு 5 வீத இறக்குமதித் தீர்வை.

★ குறைந்த மின், நீர் பாவனைக்கு விசேட கட்டணக் கழிவு.

★ தனிநபர் வருமான வரிக்கான வருமான எல்லை ரூ.3 லட்சமாக உயர்வு.

★ உரத்துக்கு அதியுச்ச மானிய உதவி.

★ வாகன இறக்குமதிக்கான வரிவிதிப்பு நூறுவீதம் உயருகிறது.

★ துறைமுகத் தீர்வை 3 வீதத்திலிருந்து 5 வீதமாக உயர்வு.

## புலிகளை முற்றாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனது பதவிக்காலத்தில் சுமார் அரைவாசிப் பகுதி முடிவடைந்துவிட்டது. இந்தக் காலப் பகுதியில் நாம் என்ன செய்தோம் என்பது அனைவருக்குமே தெரிந்த விடயம். எனது அடுத்த அரைவாசிப் பதவிக்காலத்தில் என்ன செய்யப்போகிறோம் என்பதை நாமெல்லாம் சேர்ந்து தீர்மானிக்க வேண்டும்.

நான் பதவியேற்ற காலத்தில், அதாவது 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் எப்படியான நிலைமை இருந்தது என்பது உங்களுக்கு நினைவிருக்கும். வடக்கு - கிழக்குப் பகுதிகள் பயங்கரவாதிகளின் பிடியில் இருந்தன. அங்கே நீதிமன்றங்கள், வங்கிகள் போன்ற கட்டமைப்புக்கள் சட்ட விரோதமாக இயங்கின. சிறுவர்கள் ஆயுதப் போராட்டத்தில் இணைக்கப்பட்டார்கள். பெண்கள் தற்கொலையாளிகளாகப் பயன்படுத்தப்பட்டார்கள்.

### கண்மூடித்தனமான போர்நிறுத்தம்

2002இல் புலிகளுடன் கண்மூடித்தனமாகச் செய்யப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் காரணமாகப் புலிகள் மேலும் பலமடைந்து பயங்கரவாத நடவடிக்கைகளை நினைத்தபடி முன்னெடுத்தார்கள்.

புலிகள் இதுவரை சிங்களத் தலைவர்களைக் கொன்றதைவிட தமிழ்த் தலைவர்களைக் கொன்றதே அதிகம். தமிழ் ஜனநாயகத் தலைவர்களைக் கொன்றதன் மூலம் ஜனநாயகத்தை வேரோடு அழிக்க அவர்கள் முயன்றார்கள்.

இத்தகைய பயங்கரவாதிகளுக்கு மேலும் வாய்ப்பு வழங்கும் வகையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கையும் சுனாமிக் கட்டமைப்பும் உருவாக்கப்பட்டன. இந்த வரலாற்றுத் தவறுகள் நான் பதவியேற்ற பிறகு [illegible] செய்யப்பட்டன.

மனிதாபிமான நடவடிக்கை மூலம் புலிகளிடமிருந்து கிழக்கு மாகாணம் முற்றாக விடுவிக்கப்பட்டது. அந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டன. இதுவரை 2 ஆயிரத்து 500 கோடி ரூபா வரையில் கிழக்கு அபிவிருத்திக்காக செலவிடப்பட்டுள்ளது.

### பெரும் நிலப்பரப்பு கைப்பற்றப்பட்டுவிட்டது

அதேபோல மன்னார், வவுனியா, அனுராதபுரம், முல்லைத்தீவு, மணலாறு போன்ற பகுதிகளை புலிகளிடமிருந்து முற்றாக விடுவிக்கும் மனிதாபிமான நடவடிக்கையை ஆரம்பித்தோம். அந்தப் பகுதிகளில் பெரும்பாலான நிலப்பரப்பை எமது படையினர் கைப்பற்றியிருக்கின்றனர்.

கிளிநொச்சி முல்லைத்தீவில் எஞ்சியுள்ள சில பிரதேசங்களையும் விடுவிக்கும் நாள் நெருங்கிவிட்டது. எமது படையினர் உலகின் மிகவும் கொடூரமான பயங்கரவாதிகளுடன் போரிட்டு முன்னேறுகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவில் உள்ள மக்களை விடுவித்து, அவர்களின் உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்தி அபிவிருத்தி செய்யும் காலம் வெகு தூரத்தில் இல்லை. இருந்தாலும் அதற்கிடையில் ஜனநாயக நீரோட்டத்தில் வந்து இணைந்து கொள்ளுமாறு நான் பயங்கரவாதிகளுக்குக் கூறுகின்றேன். இல்லையேல் யுத்தம் மூலம் உங்களைத் தோற்கடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாங்கள் தள்ளப்படுவோம் - என்றார் ஜனாதிபதி. (சி)

## வன்னிக்கு உதவிப் பொருள்களை அனுப்ப செஞ்சிலுவைக் குழுவை நாடுகிறது இந்தியா

புதுடில்லி, நவ.7

வன்னிப் பகுதிக்கு நிவாரணப் பொருள்களை அனுப்புவது தொடர்பாக இந்திய அரசு சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை அணுகியுள்ளது.

புதுடில்லியில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் தலைவர் பிரான்கொய்ஸ் ஸ்டம் இதனை 'இந்தோ - ஆசிய' செய்திச் சேவைக்குத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான ஒரு நடவடிக்கைக்காக இந்தியா தங்களை அணுகியுள்ளமை இதுவே முதற்றடவையெனக் குறிப்பிட்டுள்ள அவர் இது குறித்து மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

நிவாரணப் பொருள்களை இலங்கையின் வன்னிப் பகுதிகளுக்கு எடுத்துச் சென்று விநியோகிப்பது தொடர்பான விடயங்கள் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சுடன் தாங்கள் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவித்துள்ள பிரான்கொய்ஸ் ஸடம், இந்தியா சர்வதேச செஞ்சிலுவைக்குழு ஊடாக உதவிகளை வழங்குவது குறித்து உறுதியாக இருக்கிறது என்றும் கூறினார்.

இலங்கையின் வட பகுதியில் நிலைமை மிக மோசமாகவுள்ளது என்றும், மோதல் காரணமாக மக்கள் இடம் பெயர்ந்துள்ளதுடன் வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் ஸ்டம் தெரிவித்துள்ளார்.

''யாருக்காக உதவிப் பொருள்கள் அனுப்பப்படுகின்றனவோ அவை அவர்களைச் சென்றடைவதை உறுதிசெய்வதே எமது நோக்கம். இதில் எவ்வித மாற்றமும் இல்லை. இதனை நிறைவேற்ற எம்மிடம் வழிமுறைகள் உள்ளன. இதனை எவ்வாறு வேகமாகவும் சிறப்பாகவும் செய்வது என்பது குறித்தே நாங்கள் கவனம் செலுத்துகிறோம்'' எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனகரத்தினம் ம.ம.விக்கு எதிரான ஆட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி சாதனை படைத்தது

## கனிஸ்ரன், சௌமிதரன் விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்

வலி.வடக்கு, நவ.7

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் செலான் வங்கியின் யாழ். கிளையின் அனுசரணையுடன் நடத்தப்படும் 13 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் போட்டியின் ஆட்டமொன்றில் யாழ். மத்திய கல்லூரி அணி புதிய சாதனை ஒன்றைபடைத்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியும் அரியாலை கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி இன்னிங்ஸ் மற்றும் ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன் ஓர் இன்னிங்ஸில் 12 ஓட்டங்களுக்குள் எதிரணியை ஆட்டமிழக்கச் செய்து புதிய சாதனை ஒன்றையும் படைத்தது.

முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் 18.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 12 ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

இதில் தேவராஜா 3 ஓட்டங்களையும் ஆரூரன் 2 ஓட்டங்களையும், பிரசாந் ஓர் ஓட்டத்தையும் பெற்றுக் கொண்டனர். உதிரிகளாக 6 ஓட்டங்களும் பெறப்பட்டன.

13 வயதுப் பிரிவினருக்கான ஆட்டம் ஒன்றில் ஓர் அணி ஆக்குறைந்த ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தமை இதுதான் முதல் தடவை என்று கூறப்படுகின்றது.

யாழ். மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய யூலியஸ் கனிஸ்ரன் 8.3 ஓவர்கள் பந்து வீசி 6 ஓட்டமற்ற ஓவர்களுடன் 2 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளையும், நிருபன் 3 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 1 ஓட்டத்துக்கு 4 விக்கெட்டுக்களையும், சர்மிகன் 3 ஓவர்கள் பந்து வீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் ஓர் ஓட்டத்துக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி 44.1 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 147 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

லவோஜன் ஓர் ஆறு, ஏழு நான்குகளுடன் 69 ஓட்டங்களையும், ஜெயேந்திரன் 17 ஓட்டங்களையும், பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 39 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தின் சார்பில் பந்து வீசிய பிரசாந் 13.1 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 21 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சுரேஷ் 14 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 31 ஓட்டங்களுக்கு ஓர் விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.



கனிஸ்ரன் சௌமிதரன்

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி 22ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

பிரசாந் 29 ஓட்டங்களையும், லக்ஸ்மன் 19 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

யாழ். மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய சௌமிதரன் 9 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், நிருபன் 5 ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், யூலியஸ் கனிஸ்ரன் 6 ஓவர்கள் பந்துவீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 4 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சர்மிகன் 2 ஓவர்கள் பந்து வீசி 10 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

ஆட்ட முடிவில் யாழ். மத்திய கல்லூரி அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 75 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. (50-86)

## சென்.பற்றிக்ஸ்-மகாஜன மோதல்கள்

வலி.வடக்கு, நவ.7

யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக்கொண்ட உதைபந்தாட்ட போட்டிகளில் 16, 20 வயதுப் பிரிவு ஆட்டங்கள் சமநிலையில் முடிந் தன. 18 வயதுப் பிரிவில் சென்.பற்றிக் ஸூம் 14 வயதுப் பிரிவில் மகாஜனவும் வென்றன.

14 வயதுப் பிரிவில் மகாஜனக் கல்லூரி 02: 01 என்ற கோல் கணக்கில் சென்.பற்றிக்ஸ் கல்லூரியை வென்றது.

16 வயதுப் பிரிவில் இரு கல்லூரி அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

18 வயதுப் பிரிவில் யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி 02:01 என்ற கோல் கணக்கில் மகாஜனக் கல்லூரியை வென்றது.

20 வயதுப் பிரிவில் இரு கல்லூரி அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றதால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (1-86)

## மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

உடுப்பிட்டி, நவ.7

உள்ளூராட்சி மன்றங்களின் விளையாட்டுக்கழகங்களுக்கிடையே 11பேர் பங்குபற்றும் 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றை யாழ். மாநகர சபை விளையாட்டுக்கழக[illegible] நாளை சனிக்கிழமையும் நாளை மறுதின[illegible] ஞாயிற்றுக்கிழமையும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் நடத்தவுள்ளது.

கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடை[illegible]பறவுள்ள மேற்படி மென்பந்து கிரிக்[illegible]கட் சுற்றுப்போட்டியில் 10 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (201)

## மாவட்ட மட்டத்தில் தாச்சிச் சுற்றுப்போட்டி

நாவற்குழி, நவ.7

'சோ ஆ' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் தாச்சி விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் சுற்றுப்போட்டி ஒன்றை வெகுவிரைவில் நடத்தவுள்ளது.

தென்மராட்சி, வலிகாமம், தீவகம், வடமராட்சி எனப் பிரதேச ரீதியாக முதலில் போட்டிகள் நடத்தப்படும். பிரதேச ரீதியாக இவ்விரண்டு கழகங்கள் தெரிவு செய்யப்பட்டு அவை மாவட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளன.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்ட தாச்சிச் சங்க நிர்வாகிகள் ஊடாக விளையாட்டுக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காத கழகங்கள் கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள மாவட்ட தாச்சிச் சங்க அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொள்ள முடியும் .

தென்மராட்சியிலுள்ள கழகங்கள் கைதடி வளர்மதி விளையாட்டுக் கழகச் செயலாளரிடம் விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதிஎதிர்வரும் 10 திகதி என அறிவிக் கப்பட்டுள்ளது. (50-288)

# பந்துவீச்சில் பார்த்தீபன், லிங்கநாதன் ஆறு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்

## ஸ்கந்தாவை வென்றது கொக்குவில்இந்து



பார்த்தீபன் லிங்கநாதன்

யாழ்ப்பாணம், நவ.7

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையில் 13 வயதுப் பிரிவுக்கு இடம்பெற்ற கிரிக்கெட் ஆட்டம் ஒன்றில் கொக்குவில் இந்து முதல் இன்னிங்ஸில் வெற்றி பெற்றது.

கொக்குவில் வீரர்களான பார்த்தீபன், லிங்கநாதன் ஆகியோர் ஆறு விக்கெட்டுக்களை சாய்ந்து அதன் வெற்றிக்கு உதவினர்.

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 13 வயதுப் பிரிவினருக்கு நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இந்த ஆட்டம் இடம் பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 35.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 72 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

சத்தியன் ஒரு நான்குடன் 15ஓட்டங்களையும், லிங்கநாதன் இரண்டு நான்குகளுடன் 12 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீசிய துவாரகன் 5.4 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சிவசுதன் 19 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 26.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 47 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துவாரகன் இரண்டு நான்குகளுடன் 18 ஓட்டங்களையும், ஜனார்த்தன் இரண்டு நான்குகளுடன் 13 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 10 ஓட்டங்களும் பெறப்பட்டன.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில். பந்து வீசிய பார்த்தீபன் 11.4 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களையும் லிங்கநாதன் 7 ஓவர்கள் பந்து வீசி 4 ஓட்டமற்ற ஓவர்களுடன் 3 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினா.

இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி 28 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

பார்த்தீபன் இரண்டு நான்குகளுடன் 15ஓட்டங்களையும், சத்தியன் இரண்டு நான்குகளுடன் 11ஓட்டங்களையும், கீரத்திகன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 23 ஓட்டங்களும் பெறப்பட்டன.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சார்பில் பந்து வீசிய விதுசன் 5 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் ஜனக்ஸன், சிவசுதன், றொசான் முறையே 10, 06, 7 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி 22 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 52 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டம் நிறைவு பெற்றது.

சுகந்தன் 10 ஓட்டங்களைப் பெற்றதுடன் உதிரிகளாக 17 ஓட்டங்களும் பெறப்பட்டன. கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பில் பந்து வீசிய லிங்கநாதன் 11 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 13 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களை சாய்த்தார். (1-86)




# மென்பந்து கிரிக்கெட் ஆட்டத்தில் சம்பியனானது மத்திய கல்லூரி அணி



எறிக் துஷாந்தன்

வலி .வடக்கு, நவ.7

யாழ்ப்பாணக் கல்வி வலயம்கனடிய பல்கலைக் கழக உலக சேவைகள் நிறுவனத்தின் 10ஆம் ஆண்டு நிறைவையொட்டி இணைந்து யாழ்.கல்வி வலய பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட 10 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய் யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும், திருநெல்வேலி முத்துத்தம்பி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய முத்துத்தம்பி மகாவித்தியாலயம் 8.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

ரவி ஆட்டமிழக்காது 15, செந்தூரன் 2, சுதர்சன் 3 ஓட்டங்களை பெற்றுக் கொண்டதுடன் உதிரிகளாக 6 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்.மத்திய கல்லூரி சார்பில் பந்து வீசிய எறிக்துஷாந்தன் 2 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

மிகவும் குறைந்த 27 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி 3:1 ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஜேம்ஸ் ஆட்டமிழக்காது 14, தேசிகன் 9 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தின் சார்பில் பந்து வீசிய ரவி ஒரு விக்கெட்டை கைப்பற்றினார். (1-86)

# தெல்லிப்பழை கோட்ட உதைபந்தாட்டம்; யூனியன் கல்லூரி வென்று சம்பியனானது

வலி.வடக்கு, நவ.7

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற 16வயது பிரிவினருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி கோட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் நான்கு தடவைகளுக்கு மேல் கோல்கள் பெறும் சந்தர்ப்பம் யூனியன் கல்லூரிக்கு கிடைத்த போதும் அதனைச் சரியாகப் பயன்படுத்தாமையால் கோல்பெறும் வாய்ப்பை அது இழந்தது.

இரண்டாவது பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெற எடுத்த முயற்சிகள் கைகூடாத நிலையில் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக சம நிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதனை யூனியன் கல்லூரி உரிய முறையில் பயன் படுத்திக் கொண்டது.

யூனியன் கல்லூரி 5:4 என்ற கோல் கணக்கில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியை வென்று கோட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

(1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடுவில் மகளிர் கல்லூரியில் கணனி ஆய்வுகூடம், வள நிலையம், அமரர் திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி ஞாபகார்த்த மண்டபம் என்பன அண்மையில் திறந்துவைக்கப்பட்டன. அதையொட்டி இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளில் ஒருசில காட்சிகளைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பல்வேறு நெருக்கடிகள், பிரச்சினைகளுக்கு மத்தியிலும் சிறப்பாகச் சேவையாற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்

## உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பெருமிதம்

நல்லூர்,நவ.7

பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலையிலும் குடா நாட்டு உள்ளூராட்சி மன்றங்கள் தமது பிரதேசத்தின் அத்தியாவசியத் திட்டங்களை இயலுமானவரை நிறைவேற்றி வருகின்றன.

வேலணை பிரதேச சபையின் உள்ளூராட்சி வார விழாவில் பேசிய யாழ்ப்பாணம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கை.மகேந்திரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவி ஆணையாளர் மேலும் பேசும்போது கூறியவை வருமாறு:-

பிரதேச சபைகளின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பு என்பது குறைந்த அளவில் கூட இருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வொருவரும் தங்களது பிரதேசத்தின் வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொள்ளாது தொலைவில் நிற்பது கவலைக்குரியது.

மக்களின் பங்களிப்புடன் சிறந்த செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பது அமைச்சின் கருத்தில் உள்ளதால் புதிய மறுமலர்ச்சித் திட்டங்களை மக்களின் பங்களிப்புடன் நிறைவேற்றக் கூடியதாக அவற்றை அமுலாக்கும் வழிவகைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

போக்குவரத்து உட்பட ஏற்படக்கூடிய பல்வேறு சிரமங்களின் மத்தியிலேயே உத்தியோகத்தர்கள் தமது கடமைகளுக்கு வருகிறார்கள். தமது கஷ்டங்களின் மத்தியிலும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செயற்பாடுகளை மேற்கொள்ள வரும் அவர்களுக்கு மக்கள் தமது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவது அவசியம்.

தேவைகளை அறிந்து செயற்படுத்தப்படும் திட்டங்களைப் பகுதி, பிரிவு என்ற கருத்து வேறுபாடு இன்றி எமது பிரதேசத்தில் இடம்பெறும் ஓர் அபிவிருத்தி நடவடிக்கை என்ற சிந்தனையுடன் ஒவ்வொருவரும் நோக்கவேண்டும். உள்ளூராட்சி மன்றங்களுடன் ஒத்துழைத்தால் பிரதேசம் துரித வளர்ச்சியுறும். இங்கு வேலணை பிரதேச சபை எடுத்து வரும் அபிவிருத்தித் திட்டங்கள் நல்ல முறையில் இடம்பெற்று வருகின்றன. தமது நீண்டகால சேவையின் சிறப்பால் இந்தப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காகச் சேவை புரிந்த உத்தியோகத்தர்கள், செய்தியாளர்களைக் கௌரவித்துப் பாராட்டியமை பிரதேசத்தின் வளர்ச்சிக்கு மேலும் உறுதுணையாகும் - என்றார்.

வேலணைப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் பேசும்போது கூறியவை வருமாறு:-

ஏனைய இடங்களிலும் பார்க்க வருமானம் குறைந்ததாக இந்தப் பிரதேச சபை இருந்தபோதும் தனது பகுதியின் முக்கிய திட்டங்களை முடிந்த அளவு சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடற்றொழில் போன்ற வருமானம் தரக்கூடிய துறைகளையும் உள்வாங்கிக் கொள்ளல் வேண்டும். இங்கே வருமானம் இல்லை, வளமாக வாழ வாய்ப்பில்லை என்று நினைப்பது தவறு.

பிரதேச சபை ஆற்றிய பணிகளுக்குச் சிறந்த ஒத்துழைப்பை வழங்கிய உத்தியோகத்தர்கள், பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்படுகின்றமை இந்தப் பிரதேச மக்களுக்குக் கிடைத்த கௌரவமாகவே கொள்ளப்படும் - என்றார்.

வேலணை உதவி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தி.மீரா, ஊர்காவற்றுறை இலங்கை வங்கி முகாமையாளர் கு.சிவஞான சுந்தரம் உட்படப் பலர் உரையாற்றினர். (202-111)

## யாழ்.மறை மாவட்ட குருமார்களுக்கு தியான வழிபாடுகள்

யாழ்ப்பாணம்,நவ.7

யாழ்.மறை மாவட்டக் கத்தோலிக்க குருமார்களுக்கு ஒருவாரம் தியான வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முதற் கட்டமாக ஆரம்பமாகும் தியான வழிபாடுகள் 15ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறும்.

இரண்டாம் கட்ட வழிபாடுகள் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடங்கி 22ஆம் திகதி சனிக்கிழமை வரை இடம்பெறும். (202-160)

## முதியோருக்கு புடைவைகள்

வடமராட்சி,நவ.7

சர்வதேச முதியோர் தினம், தீபாவளிப் பண்டிகை என்பவற்றை முன்னிட்டு தொண்டைமானாறு செல்வச்சந்நிதிச் சூழலில் வாழ்ந்துகொண்டிருக்கும் 70 முதியவர்களுக்கு வேட்டி, துவாய், சேலை, போர்வை போன்ற உடுபுடைவைகள் வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பொது வேலைத்திட்டத்தின் கீழ் இவை முதியோர்களுக்கு வழங்கப்பட்டன. (202-236)




# யாழ்ப்பாணம்

## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வ.து

# கூட்டுறவு மண்டபம்



127, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 222 2587, 7937

கலந்துரையாடல்கள், பயிற்சிப் பட்டறைகள், விருந்துபசாரங்கள் ஆகிய நிகழ்வுகளுக்கேற்ப வடிவமைக்கப்பட்ட மண்டபம். நியாயமான கட்டணத்தில் வாடகைக்குப் பெற்றுக்கொள்ளலாம். நிகழ்வுகளுக்கு ஏற்றவாறு ஆசன வசதிகள், ஒலி, ஒளி வசதிகள், பாதுகாப்புடன் கூடிய வாகனத் தரிப்பிட வசதிகள் யாவும் செய்து தரப்படும்.

01.01.2009 முதல் புதுப்பிக்கப்பட்ட கட்டண விவரம்

| | |
|---|---|
| முதல் மூன்று மணித்தியாலங்களுக்கு | ரூபா 2500 |
| அடுத்துவரும் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் | ரூபா 700 |

(சி/555217) பொது முகாமையாளர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளாக 24 பேர் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.7

புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகளிடையே பரவலடையச் செய்வதற்காகவும் விவசாயிகளை ஊக்குவிக்கும் நோக்கிலும் புலோலி விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகள் 24 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

8 தலைப்புகளில் நடத்தப்பட்ட போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்ற விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் புலோலி கமநல நிலைய மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரிவு விவசாயப் போதனாசிரியர் எஸ்.சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைப் பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதி விவசாயப் போதனாசிரியர் எஸ்.சிவகுமார், பருத்தித்துறைப் பிரதேச கால்நடை வைத்தியர் எஸ்.வசீகரன் ஆகியோர் கலந்துகொள்வர்.

விழா மண்டபத்தில் விவசாயிகளுக்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன. அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்படும். எம்.ஐ-6, ஆரி, ஹாசா இனப் பயறு விதைகளும், றுவான் இன சோளவிதையும் திஸ்ஸ இன நிலக்கடலை விதையும் பொம்பே இன கௌபீ விதையும் விற்பனைக்காக வைக்கப்படவுள்ளன.

வெற்றியீட்டிய விவசாயிகளின் பெயர் விவரம் வருமாறு:-

*சிறந்த நெல் உற்பத்தியாளர்:* சின்னக்குட்டி செல்லையா (துன்னாலை வடக்கு), வல்லி சின்னராசா (வல்லிபுரம்), ஆழ்வான் மார்க்கண்டு (துன்னாலை வடக்கு).

*சிறந்த வெற்றிலைச் செய்கையாளர்:* கி.முருகேசு (கெருடாவில் தெற்கு), மு.பஞ்சலிங்கம் (கெருடாவில் தெற்கு), சி.துரைராசா (கெருடாவில் தெற்கு).

*சிறந்த சுயவிதை நெல் உற்பத்தியாளர்:* கணபதி கிட்டிணன் (வல்லிபுரம்), செல்லமுத்து ஜெகநாதன் (துன்னாலை வடக்கு), குலசேகரம் அலைமேல் (தொண்டைமானாறு தெற்கு).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்:* கதிர்காமு கோபாலகிருஸ்ணன் (பொலிகண்டி கிழக்கு), ஆறுமுகம் தங்கவேல் (புலோலி மேற்கு), சிவராசா உருத்திரகுமார் (கெருடாவில் கிழக்கு).

*சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி:* கோணன் யோகராணி (புலோலி மேற்கு), நடராஜா கெங்காதேவி (கெருடாவில் வடக்கு), குணசிங்கம் மங்கையர்திலகம் (கெருடாவில் கிழக்கு).

*சிறந்த சோளச் செய்கையாளர்:* ரேணுகா சோதிலிங்கம் (கெருடாவில் தெற்கு), இராமசாமி இரத்தினசிங்கம் (கெருடாவில் தெற்கு), சின்னத்துரை குணலிங்கம் (கெருடாவில் கிழக்கு).

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்:* மு.கலாதரன் (வியாபாரிமூலை), ஆ.சிறீரங்கநாயகி (வல்லிபுரம்), ப.பரராசசிங்கம் (வல்லிபுரம்).

*சிறந்த குரக்கன் செய்கையாளர்:* க.குலசிங்கம் (கெருடாவில் தெற்கு), ஆ.குணபாலசிங்கம் (கெருடாவில் தெற்கு), க.சிவகுமார் (புலோலி மேற்கு). (202)

## ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நினைவு நாளும் பரிசளிப்பும்

வலி.வடக்கு,நவ.7

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கல்லூரி அதிபர் ஆறு.திருமுருகன் தலைமையில் ஒறேற்றர் சுப்பிரமணியம் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கனும், வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி கௌரி சண்முகலிங்கனும் கலந்துகொள்வர்.

பிரதி அதிபர் சி.மகேந்திரன் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார். (202-86)



குடைச்சுவாமி திருவடித் தொண்டர்கள் ஆன்மீக மன்றத்தின் ஏற்பாட்டில் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள சிறுவர்களுக்கு மன்றத்தின் தொண்டர் இ.கருணாகரன் இலவசமாகக் கற்றல் உபகரணங்கள் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம். (படம்: லக்ஸ்மண்)

# புதிய கட்டடங்களை அமைப்பது தொடர்பாக வலி.கிழக்குப் பிரதேச சபை அறிவுறுத்து

கோப்பாய்,நவ.7

வலி.கிழக்குப் பிரதேச சபை எல்லைக்குள் வதியும் குடியிருப்பாளர்கள் புதிய கட்டடங்கள், தொழிற்சாலைகள் அமைத்தல், அவற்றைப் பிரதேச சபையில் பதிவுசெய்தல் தொடர்பான நடைமுறைகள் குறித்து சபைச் செயலர் த.நடராஜா அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

இந்த நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் தமது அன்றாட கருமங்களில் ஏற்படும் வீண் விரயங்கள், சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள அறிவுறுத்தல்களின் விவரங்கள் வருமாறு:

* புதிதாகக் காணி கொள்வனவு செய்பவர்கள் குறித்த காணி பிரதேச சபை உப அலுவலகப் பதிவேட்டின்படி குறித்த நபரது பெயரில் பதியப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்தல்.

* புதிதாகக் கட்டடம், மதில், மலசலகூடம், கிணறு ஆகியவற்றை அமைப்பதற்கோ, திருத்தம் செய்வதற்கோ பிரதேச சபையிடம் அனுமதிகள் பெறுவதன் மூலம் வங்கிக் கடன், சிமெந்து, மணல் போன்றவற்றின் அனுமதிப்பத்திரம் பெற அனுகூலம் ஏற்படும்.

* அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

* காணி உரிமையாளர்கள் பிரதேச சபையின் சோலை வரிப் பதிவேட்டில் தமது பெயரில் காணி பதியப்பட்டுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். இல்லாதவிடத்து உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பெயர் மாற்றம் செய்துகொள்ளவேண்டும்.

* சோலை வரியை உரிய காலத்தில் செலுத்தவேண்டும்.

* தொழிற்சாலைகள், கல்லுடைக்கும் ஆலைகள், அரைக்கும் ஆலைகள், உணவுச் சாலைகள், வெதுப்பகங்கள், வாகனச் சுத்திரிகரிப்பு நிலையங்கள் என்பவற்றுக்கு உரிய காலத்தில் சுற்றுச்சூழல் அனுமதிப்பத்திரம் பெறப்படல்வேண்டும் - என்றுள்ளது. (202-72)



யாழ்.அருள்மிகு ஸ்ரீ வீரமகாகாளி அம்மன் கோவில் கேதார கௌரி விரத உற்சவம் இலட்ச அர்ச்சனையுடன் 21 தினங்கள் நடைபெற்றது.

அர்ச்சனை பூர்த்தி அன்று விசேட திரவிய கோம மகா அபிஷேகம் நடைபெற்றது.

கௌரி விரதப் பூர்த்தி அன்று சுவாமியும் அம்பாளும் கைலாச வாகனத்தில் வீதிஉலா வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தபோது எடுக்கப்பட்ட படம்.

# கந்தஷஷ்டியில் வேலின் பெருமையும் முருக நிலையும்

ஞானக்கதிர்

கலியுகக் கடவுள் கந்தனுக்கு கந்தஷஷ்டி அனுஷ்டிக்கப்படுகிறது. கந்தன், முருகன், வேலன் என நாம் குறிப்பிடும் அந்த மயில்வாகனன் தமிழர் மத்தியில் தமிழ்க் கடவுள் ஆக தமிழரின் காக்கும் தெய்வமாகக் கருதப்படுகின்றான். கந்தன் என்று கூறும்போது எமக்குத் தோன்றும் ஒரு வடிவம்தான் வேல். அநேகமாக முருகன் ஆலயங்களில் வேலே மூல மூர்த்தியாகத் தாபிக்கப்பட்டிருக்கிறது. அந்த வேல் ஒரு பிந்து சொரூபமாகவும் மத்தியிலே ஒளி பொருந்திய வைரக்கல் பதிக்கப்பட்டும் காட்டப்படுகிறது.

இது இலங்கையில் மட்டுமல்லாது ஆறுபடை வீடுகளிலும் இவ்வாறான தோற்றம் காணப்படுகிறது. இது ஆராயும் நீதி வேலாகும். உயிர்களின் வினைகளை அப்புறப்படுத்தி உண்மையான பக்தியை அறிவதற்குக் கருவியாக அமைந்தது வேல்.

இது குறிப்பது என்ன என்பதை ஆராய்வோமானால் வேல் பிந்து சொரூபமான வடிவில் காணப்படுகிறது. பிந்து சொரூபம் என்பது ஆத்மசொரூபமாகும். அதாவது தாம் ஆத்ம நிலையில் இருக்கவேண்டுமானால், அதாவது ஆத்ம உணர்வில் இருக்கவேண்டுமானால், பிந்து சொரூப நிலைக்கு வரவேண்டும். உடல் உணர்வுகளில் இருந்து பிரிந்த நிலைக்கு வரவேண்டும். அவ்வாறு இருக்கும்போதே நம் வாழ்க்கை மிளிர்கிற வைரத்தின் பெறுமதி உடையதாக அமையும்.

இவ்வாறு நாம் வரும்போது எம் முன் இருக்கும் அசுர குணங்கள் சுர குணங்களாக மாற்றம் பெறும். அதாவது கந்தஷஷ்டி இறுதி நாள் முருகன் சூரனை வதம் செய்வதாகச் சித்திரிக்கப்படுகிறது. அதாவது சுர குணமாகிய ஆத்ம உணர்வு எங்களுள் இருக்கும் அசுர குணங்களை அழித்து எம்மை மேலுயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. பௌதிகமான சூரன் போரில் சூரன் வதம் செய்யப்படும்போது முருகன் அவனை தனது மயிலாகிய வாகனமாகவும், கொடியாகிய சேவலாகவும் மாற்றுவாதாகச் சித்திரிப்பதைக் காணமுடியும்.

கச்சியப்ப சிவாச்சாரியார் 'மூவிரு முகங்கள் போற்றி' எனப் பாடியவர் வேலுக்கு மட்டும் இருமுறை போற்றிக் கூறினார். அதாவது "திருக்கை வேல் போற்றி போற்றி" எனப் பாடினார். ஏனைய படைக்கலங்கள் யாவும் புறப்பகையை மாத்திரம் வெல்லும். இந்த வேல் ஆயுதமோ உடம்பை அழிக்காது. உயிரையும் நீக்காது. உயிரிற்கு மயக்கமூட்டும் அறியாமையை அகற்றி உள்ளொளியைப் பெருக்கும்.

இன்று இவ்வுலகில் இந்த 'கல்பத்தில்' பல ஆண்டுகள் சென்று இறுதி நிலைக்கு வந்திருந்தாலும் இன்று வரை தூய்மையான பிராணியாக மயில் காணப்படுகிறது. நாம் தூய வாகனத்தை அல்லது ரதத்தை ஏற்கவேண்டுமாக இருந்தால் எம்முடைய ஸ்திதி ஆகிய இந்த 'ஆத்மா' என்ற நிலை அதாவது பிந்து சொரூபமான நிலை வரவேண்டும். ஆத்மநிலையில் ஆத்ம உணர்வில் நாம் இருந்தால் ஒரு தூய ஆடையாகிய உடலை எம் ஆத்மாவால் பெறமுடியும். இதற்காகவே நாம் கந்தஷஷ்டியை அனுஷ்டிக்கிறோம். அவ்வாறு வரும்போது சேவலானது எமக்கு வைகறைப் பொழுதில் இறைவனை நினைப்பதற்கு ஒரு தூண்டுகோலாக அமைகிறது. ஆத்ம உணர்வில் இருக்கும் நாம் வைகறைப் பொழுதில் இறைவனை நினைப்பதற்குச் சேவலாகிய விழிப்புணர்வு எமக்கு வருகிறது.

மறுதினம் முருகன் ஆலையங்களில் மேற்கொள்ளப்படும் நிகழ்வாக திருக் கல்யாண வைபவம் இடம்பெறுகிறது. முதலிலே ஆத்மீக சக்தியும் இரண்டாவதாக பௌதீக சக்தியும் இணைந்த ஒரு நிலை உருவகம் தான் தெய்வானை, வள்ளி சமேதரான முருகநிலை. [illegible] "மகாரதி" பாகமும் பௌதீக சக்தியை, ஆத்மசக்தியுடன் இணைப்பதில் துணைபோகிறது.

-[illegible]



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்திய அருணகிரிநாதர் விழாவில் நீர்வை குமாரராஜசர்மா சொற்பொழிவாற்றுவதையும், இந்துசமய கலாசார திணைக்களத்தின் யாழ்.மாவட்ட முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (236)



புனரமைப்புச் செய்யப்பட்ட கற்கோவளம் மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தை அபிஷேகம் செய்து வைத்த இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் அருட்திரு. ஸ்.டபிள்யு.பி.பெனேசர் ஜோசப் அடிகளார் அங்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட குருமனையின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்து வைப்பதை படத்தில் காணலாம். (படம்: கர்ணன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் பிலேந்திரன் ஜேம்ஸ்

எங்கள் அப்பாவே ஆண்டுகள் மூன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது.

*ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:*
கொழும்புத்துறை. (79624) குடும்பத்தினர்.

## இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பு

யாழ்ப்பாணம், நவ.7

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் வார இறுதி நாள்களான சனி, ஞாயிறு ஆகிய நாள்களில் பிற்பகல் 3.15 மணி முதல் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்புகளை நடத்தி வருகின்றனர்.

துறைசை ஆதீன திருமுறைத் தோன்றல் கே.எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனால் நடத்தப்படும் மேற்படி பண்ணிசை வகுப்பில் ஆண், பெண் ஆகிய இருபாலரும் பங்குபற்றலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை வகுப்புகள் நடைபெறும் நேரங்களில் மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தியிடம் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(201)

## சேவை நலன் பாராட்டு




07.11.2008 இன்றுடன் தனது சேவையில் இருந்து ஓய்வுபெறும்
**திருமதி சிவபாக்கியம் அரியரத்தினம்** அவர்கள்
ஈர் பதினாறு வருடங்கள்
இணையற்ற பணி புரிந்தீர்
யாழ்.மாவட்டதின் அஞ்சல் சேவையில்
முதல் நிலையில் பெண் அஞ்சலதிபரானீர்
சிவன் தந்த பாக்கியமாய் வந்து
எம் சிந்தை மகிழச் செய்தீர்
தன்னலமற்ற பணி புரிந்திட்ட
தாயே! நீ நீடூழி வாழி வாழி.

**வாழ்த்துவோர்:**
சாவகச்சேரி அஞ்சல் சமூகத்தினர்.

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 01 ★ 02 ★ 1919



ஆண்டவன் அடியில் 09 ★ 10 ★ 2008

### அமரர் பண்டிதர் சிவகுரு ஆறுமுகம்

(முன்னாள் அதிபர், கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்)

சர்வதாரி வருடம் புரட்டாதித் திங்கள் 23ஆம் நாள் (09.10.2008) பூர்வபக்க விஜயதசமி திதியில், திருவோண நட்சத்திரத்தில் இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வம் பண்டிதர் சிவகுரு ஆறுமுகம் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

நாளை (08.11.2008) சனிக்கிழமை மு.ப. 11மணியளவில் பம்பலப்பிட்டி தொடர்மாடி சனசமூக நிலையத்தில் (Comm -unity Centre) நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருவதோடு, இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து தொலைபேசி, தந்திமூலம் ஆறுதல் கூறியோருக்கும் பத்திரிகையூடாக அஞ்சலி செலுத்தியோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் உதவி, ஒத்தாசை பல புரிந்த யாவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

41/4-1/1,Terrance Avenue,
Mount Lavinia.
T.P.0777870942

*பிரிவால் துயருறும்:*
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.7

அடுத்த கல்வியாண்டு தொடக்கம் தரம் 8இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வரலாறு, புவியியல், வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய சமூக விஞ்ஞான பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு காலை 8.30 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை குறிப்பிட்ட தினங்களில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் வரலாறு, 15ஆம், 16ஆம் திகதிகளில் புவியியல், 7ஆம், 14 ஆகிய திகதிகளில் வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகள் யாழ்.வலயக் கல்வி அலுவலக ஆசிரிய நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் கலந்துகொள்ளும் ஆசிரியர்கள் எழுது பொருள்கள், மதியபோசனம் ஆகியவற்றைக் கொண்டு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். செயலமர்வில் ஆசிரியர்கள் கலந்து கொள்வதை அதிபர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

(201)

## அன்பொளி கல்வி நிலையம்

*தபாற் கந்தோர் வீதி* *சாவகச்சேரி*

### தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை-2008

### பரிசளிப்பு நிகழ்வு

எமது கல்வி நிலையத்தில் கல்வி கற்ற மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து நாளை சனிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு நிகழ்வில் பரிசில்களும் ப்பாராட்டுக்களும் பெறும் மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

| மாணவர் பெயர் | புள்ளிகள் | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|---|
| 01) சி.சிவகரன் | 157 | 29) த.சரண்யா | 125 |
| 02) வி.வினோஜா | 156 | 30) மை.அபிராமி | 125 |
| 03) க.தயானுகா | 155 | 31) அ.நேதிகா | 124 |
| 04) ந.சுமித்திரசாந்த் | 154 | 32) ஜெ.நிருஷா | 124 |
| 05) உ.வினுஷன் | 145 | 33) இ.பிரியங்கா | 124 |
| 06) கு.ஜெயந்தன் | 144 | 34) ஆ.சாரங்கன் | 123 |
| 07) த.றஜீத்தா | 143 | 35) ம.சஞ்சீவ் | 123 |
| 08) இ.மதுஷா | 143 | 36) ஜெ.சைந்தவி | 121 |
| 09) ம.கீதானந் | 141 | 37) த.செந்தூரன் | 121 |
| 10) சி.சோபனா | 141 | 38) தெள.சாம்சன் | 120 |
| 11) சோ.கோகுல் | 138 | 39) சி.சர்மிலன் | 120 |
| 12) ர.மதுரா | 137 | 40) வி.துர்க்கா | 119 |
| 13) ந.சுஜிகாந் | 136 | 41) இ.தட்ஷாயினி | 119 |
| 14) இ.தர்மினா | 136 | 42) த.டிசோபன் | 118 |
| 15) த.தசிதா | 136 | 43) தே.அபிராமி | 118 |
| 16) த.யதாசிகன் | 135 | 44) கு.பிரியங்கா | 118 |
| 17) சூ.ஜோன்.சுஜிவன் | 135 | 45) த.பிரதீபன் | 118 |
| 18) நா.கோபிசங்கர் | 133 | 46) ப.யானுசன் | 117 |
| 19) ஜெ.காஞ்சனா | 133 | 47) க.கஜானி | 117 |
| 20) த.மிதுலா | 133 | 48) செ.மதுஜன் | 117 |
| 21) சி.யாழினி | 133 | 49) ஹ.ஹம்சாளினி | 116 |
| 22) மெள.மைத்திரேயன் | 133 | 50) சி.மாதுமை | 116 |
| 23) பா.தினுசன் | 132 | 51) மா.டிசோதன் | 115 |
| 24) சி.ஜனந்தன் | 132 | 52) தி.நிசாந்தன் | 115 |
| 25) சி.விதுசன் | 131 | 53) நி.சங்கவி | 115 |
| 26) கு.பவித்திரா | 130 | 54) ம.யாழினி | 115 |
| 27) S.தக்சா | 129 | 55) க.எபிநேசர் | 114 |
| 28) சி.மதுமிதா | 128 | 56) செ.துசீலன் | 114 |

இவர்களோடு சித்தியடைந்த ஏனைய தென்மராட்சி மாணவர்களையும் வெட்டுப் புள்ளிகளுக்கு அண்மித்த புள்ளிகளைப் பெற்ற மாணவர்களையும், கல்வி கற்ற ஏனைய மாணவர்களையும் கல்விப் பாதையில் தொடர்ந்தும் முயற்சியுடன் கல்வி கற்று வெற்றிகள் பெற்று நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வாழப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இயக்குநர்,
ஆசிரியர், உதவி ஆசிரியர்கள்.

## நீங்காத நினைவுகள்

தோற்றம் 29 ★ 07 ★ 1913



மறைவு 02 ★ 07 ★ 1960

### அமரர் நாகலிங்கம் திருஞானசம்பந்தர்

முன்னாள் ஆசிரியர்,
மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை

தோற்றம் 23 ★ 05 ★ 1920



மறைவு 01 ★ 07 ★ 1990

### திருமதி திருஞானசம்பந்தர் யோகாம்பிகை

இளைப்பாறிய ஆசிரியர்,
மீசாலை வீரசிங்கம் சைவ வித்தியாசாலை

தோற்றம் 10 ★ 11 ★ 1951



மறைவு 13 ★ 11 ★ 2006

சங்கீதரத்னம்
### திருமதி மதுரவசனி

திதி: 07.11.2008

ஆத்ம சகாயம்
கொழும்பு.
0777110892

உங்கள் நினைவுகளுடன்
- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுசரணை:- கொழும்பு தமிழ்ச்சங்க ஆசிரியர் குழு, வெள்ளவத்தை

# Special Guidance for O/L 2008 Students

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்**

**General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December**

**T / 22 / I** தமிழ்மொழியும் இலக்கியமும் - I **One hour**

கவனிக்க:
- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- 1 முதல் 40 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் (1) (2) (3) (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.
- விடைத்தாளில் உமது தெரிவிற்கு ஒத்த எண்ணின்மீது புள்ளடி (X) இடுக.

I. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. ''வெள்ளத்தால் அழியாது வெந்தழலால் வேகாது'' இங்கு வந்த 'தழல்' என்பதன் பொருள் -
(1) கழல் (2) சூரியன் (3) நெருப்பு (4) தளிர்

02. ''ஊழி திரண்டதோ கங்குல் தினகரனும்......'' இங்கு வந்த 'கங்குல்' என்பதன் பொருள் -
(1) இரவு (2) வானம் (3) பகல் (4) சூரியன்

03. ''புலம்பெயர்ந்த ஆசிரியர்கள் தாம் வாழும் இடங்களிலுள்ள பாடசாலையொன்றில் தற்காலிகமாக இணைந்து கொண்டனர்'' இங்கு வந்த தற்காலிகம் என்பதன் எதிர்ப் பொருள் -
(1) தற்சமயமாக (2) நிரந்தரமாக (3) மேலதிகமாக (4) தற்செயலாக

04. ''காண்பது சக்தியாம் ; இந்தக்காட்சி நித்தியமாம்'' இங்கு வந்த 'நித்தியம்' என்பதன் எதிர்ப் பொருள் -
(1) நித்தம் (2) சத்தியம் (3) அசத்தியம் (4) அநித்தியம்

05. ''உங்கள் தொழில் அனுபவம் பற்றி நல்லதொரு 'றிப்போட்' தருகிறேன்.'' இங்கு வந்த 'றிப்போட்' என்பதன் தமிழ்ச்சொல் -
(1) அறிக்கை (2) கடிதம் (3) கையேடு (4) சாசனம்

II. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் புள்ளிக் கோடிட்ட இடத்தினை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லினைத் தெரிவு செய்க.

06. கசாப்பு கடைக்காரன் .................. கைவரப்பெற்றவனாயிருந்தான்.
(1) மெய் ஞனம் (2) மெய்ஞ் ஞானம் (3) மெய்ம் ஞானம் (4) மெய் யானம்

07. வாழ்க்கைப் பாதையில் ................ ஏற்படுவது சகஜம்.
(1) அருமைபெருமை (2) அறம் மறம் (3) கங்குகரை (4) இன்பதுன்பம்

08. அரசஊளியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படல் வேண்டுமென ஆணைக்குழு...........செய்தது.
(1) கருத்துரை (2) விதப்புரை (3) மதிப்புரை (4) அறிவுரை

09. குற்றம் செய்த மாணவர்களுக்கு அதிபர் ..................... வழங்கினார்.
(1) அபராதம் (2) சான்றிதழ் (3) தண்டனை (4) விதிவிலக்கு

10. இவ்வாண்டு சனத்தொகை ..................... மேற்கொள்ளப்படுகிறது.
(1) வகையீடு (2) அளவீடு (3) கணிப்பீடு (4) மதிப்பீடு

III. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.

11. மானின் இளையது குட்டி எனப்படுவது போல யானையின் இளையது ?
(1) போதகம் (2) குருளை (3) பறள் (4) பிள்ளை

12. புலி உறுமும் என்பது போல எருமை-
(1) அலறும் (2) கதறும் (3) கத்தும் (4) முக்காரமிடும்

13. குறித்த ஒரு நாளில் நீதிமன்றத்திற்குச் சமுகம் தரும்படி நீதிபதியால் விடுக்கப்படும் அதிகாரபூர்வமான கட்டளை-
(1) பிடியாணை (2) தேடற்கட்டளை (3) அழைப்பாணை (4) நீதிமன்ற உத்தரவு

14. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன நாற்குணங்கள் என்பது போல சாமம், பேதம், தானம், தண்டம் என்பன-
(1) அட்டாவதானி (2) தசாவதானி (3) சதாவதானி (4) மெய்ஞ் ஞானி

IV. பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

16. 'உதவாக்கரை' என்ற மரபுத்தொடரின் பொருள் -
(1) ஆற்றங்கரை (2) உதவி கேட்பவன் (3) தட்டிக்கழிப்பவன் (4) பயனற்றவன்

17. ''ஒருவர் செய்த செயலின் பயனை அவர் அனுபவித்தே தீருவார்'' என்ற பொருள் தரும் பழமொழி-
(1) கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா?
(2) வினை விதைத்தவன் வினையறுப்பான்
(3) விளையும் பயிரை முளையிலே தெரியும்
(4) முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் கொக்காகுமா?

18. ''ஆனைக்கும் அடி சறுக்கும்'' என்ற பழமொழியின் கருத்து-
(1) வலிமை மிக்கவரும் வழுக்கி விழுவார்.
(2) யானையும் வழுக்கி விழுதல் கூடும்.
(3) வலிமை மிக்கவரும் தவறக்கூடும்.
(4) மிருகங்களின் பாதம் வலிமையற்றது.

19. துன்பத்தில் உதவி செய்தல் என்ற பொருள் தரும் மரபுச்சொற்றொடர்-
(1) கைகொடுத்தல் (2) கையைக்கட்டுதல்
(3) காலைச்சுற்றுதல் (4) வயிற்றிலடித்தல்

20. ஒருவனது புகழ் முதலியன 'எங்கும் பரவிக் காணப்படுதல்' என்பதனை விளக்கப் பொருத்தமான தொடர்-
(1) கண்மூடிப் பழக்கங்கள் (2) குமரி முதல் இமயம் வரையும்
(3) கருவிலே திருவுடைய (4) குற்றங்களைந்து குணங்கொண்டு

V. பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்க.

21. ''வேகமாக வீசிய காற்று மேசையில் இருந்த கடதாசிகளைப் பறக்கச் செய்தது.'' இவ் வாக்கியத்தின் எழுவாய் -
(1) மேசை (2) கடதாசி (3) வேகம் (4) காற்று

22. பின்வருவனவற்றுள் இயல்பு புணர்ச்சி அல்லாதது எது ?
(1) தேரூர்ந்தது (2) கடலை (3) மாங்கனி (4) மலர்விழி

23. 'வந்த மாணவர்கள்' என்பது-
(1) பெயரெச்சத்தொடர் (2) வினைமுற்றுத்தொடர்
(3) வினையெச்சத்தொடர் (4) எழுவாய்த்தொடர்

24. 'பவளவாய்' என்பது-
(1) உவமைத்தொகை (2) பண்புத்தொகை
(3) வினைத்தொகை (4) உம்மைத்தொகை

25. ''மக்களிடையே ஒற்றுமை ஓங்குக.'' இவ்வாக்கியம் -
(1) கூற்று வாக்கியம் (2) வியங்கோள் வாக்கியம்
(3) வினா வாக்கியம் (4) வியப்பு வாக்கியம்

26. எதிர்கால இடைநிலைகளாவன-
(1) த்,ட் (2) கின்று,கிறு (3) ப்,வ் (4) ற்,இன்

27. ''அப்பொய்கையில் இலங்கிய அழகிய மலர்கள் முகம் மலர்ந்து அழைப்பன போல் அசைந்தன.'' இங்கு இடம்பெறும் அணி -
(1) உவமையணி (2) தற்குறிப்பேற்ற அணி
(3) உருவக அணி (4) உயர்வு நவிற்சியணி

28. ''கடைக்குப் போன கண்ணன் சும்மா வந்தான்.'' இங்கு வந்த சும்மா என்பது-
(1) பெயர்ச்சொல் (2) வினைச்சொல் (3) இடைச்சொல் (4) உரிச்சொல்

29. 'பாசிலை' என்பதனைப் பிரித்து எழுதினால் -
(1) பாசி+இலை (2) பாசு+இலை
(3) பச்சை+இலை (4) பசுமை+இலை

30. ''மலையில் வீழ் அருவி'' எனும் தொடரில் வரும் 'இல்' உருபு உணர்த்தும் பொருள் -
(1) நீங்கல் (2) ஒப்பு (3) எல்லை (4) ஏது

VI. பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

31. அந்தச் செடியிலே காணப்படுகின்ற
(1) ஒவ்வொரு பூக்களும் அழகானவை. (3) ஒவ்வொரு பூவும் அழகியது.
(2) ஒவ்வொரு பூக்களும் அழகியது. (4) ஒவ்வொரு பூக்களும் அழகியவை.

32. அவன் தந்தையின் அறிவுரையைக்
(1) கேட்டு நடந்தானன்று. (3) கேட்டு நடந்தானல்லன்.
(2) கேட்டு நடந்தானல்ல. (4) கேட்டு நடந்தேனல்லன்.

VII. பின்வருவனவற்றுள் எழுத்துப்பிழைகளற்ற வாக்கியத்தினைத் தெரிவு செய்க.

33. (1) கள்வித்திணைக்களம் பாடநூல்களை வெளியிடுகிறது.
(2) கள்வித்திணைக்கழம் பாடநூல்களை வெளியிடுகிறது.
(3) கல்வித்திணைக்கழம் பாடநூல்களை வெளியிடுகிறது.
(4) கல்வித்திணைக்களம் பாடநூல்களை வெளியிடுகிறது.

34. (1) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொளிலாளர்கள் போராடினர்.
(2) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிளாளார்கள் போராடினர்.
(3) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிழாளர்கள் போராடினர்.
(4) விலைவாசி உயர்வுக்கு எதிராகத் தொழிலாளர்கள் போராடினர்.

VIII. பின்வரும் தனிவாக்கியங்களை ஒரு வினைமுற்றுக் கொண்ட வாக்கியமாக்கும் போது கருத்துத் திரிபடையாது அமைந்த வாக்கியத்தைத் தெரிவு செய்க.

35. அ) சங்கர் தனது நண்பன் வருகைக்காகக் காத்திருந்தான்.
ஆ) ஆனால் அவன் வரவில்லை.

(1) நண்பன் வராததால் சங்கர் அவனது வருகைக்காகக் காத்திருந்தான்.
(2) சங்கர் தனது வருகைக்காகக் காத்திருந்தாலும் அவனது நண்பன் வரவில்லை.
(3) சங்கர் தனது நண்பன் வருகைக்காகக் காத்திருந்தானாயினும் அவன் வரவில்லை.
(4) நண்பன் வருகைக்காக அவன் காத்திருந்தானாயினும் சங்கர் வரவில்லை.

IX. பின்வரும் செய்யுளைப் படித்த பின் அதன் கீழ்த் தரப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடைகளைத் தருக.

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிலை
வாழைக்குத் தானீன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லுக்கு இசைந்தொழுகாப் பெண்.

36. இச் செய்யுளின் பிரதான கருத்தாய் அமைவது-
(1) கல்லாத மாந்தர்களது வாய்ச்சொற்களால் வரும் கேடு பற்றியது.
(2) நீயொழுக்கமுள்ளவள் இல்லறத்திற்கேற்றவளல்லள் என்பது பற்றியது.
(3) கூற்றம் எவ்வெவ் வகைகளில் அமையலாம் என்பது பற்றியது.
(4) அறத்தின் வலிமை பற்றியது.

37. இச்செய்யுளில் பிரதான கருத்தை வலியுறுத்துவதற்குக் கையாளப்பட்டுள்ள உத்தி-
(1) உவமைகள் (2) உருவகங்கள் (3) இயற்கை வருணனை (4) சம்பவ வருணனை

38. வாழைக்குக் கூற்றம் எதுவெனக் கூறப்பட்டுள்ளது ?
(1) குலை (2) மெல்லிலை (3) நார் (4) வேர்

39. இங்கு இடம்பெற்ற 'கூற்றம்' என்பதன் பொருள் யாது ?
(1) இயமன் (2) கூறுதல் (3) துன்பம் (4) கொடுமை

X. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைப்பதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

40. அ) கருணாகரன் இருக்கும் வரை அவள் தன்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டாள்.
ஆ) மார்த்தாண்டன் மங்கையற்கரசியின் சிற்றப்பனின் துணையுடன் அவளை மணமுடித்திட விரும்புகிறான்.
இ) கருணாகரனைக் கொலை செய்த செய்தியை மங்கையற்கரசியிடம் கூறித் தன்னை மணந்திடுமாறு கெஞ்சுகிறான்.
ஈ) இதை நன்குணர்ந்தமையால் அவனைக் கொலை செய்கின்றான்
உ) இவனது கோழைத்தனமான செயல் கண்டு கொதித்தெழுந்த மங்கையற்கரசி அவனைப் பழிவாங்கியதுடன் தானும் உயிரை மாய்த்துக் கொள்கின்றாள்.
(1) அ,உ,ஆ,ஈ,இ (2) ஆ,இ,உ,ஈ,அ
(3) ஆ,அ,இ,ஈ,உ (4) ஆ,அ,ஈ,இ,உ

கொழும்பு தமிழ்ச்சங்கம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக மேல்மாகாண பாடசாலை மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றை கடந்தவாரம் ஏற்பாடு செய்து நடத்தி வருகின்றது. இதற்காக வளவாளர்களால் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட வினாத்தாளே இதுவாகும்.

பகுதி II பின்னர் வெளியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவு கணனி பயிற்சி நிலையத்தை அண்மையில் திறந்து வைத்தது. நிகழ்வில் ஜப்பான் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி திஷிகோ ஹிதாகரா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். முதலாவது படத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க இளைஞர் சேவை உதவிப் பணிப்பாளர் வரணசூரிய மஹேன்ற, நெடுந்தீவுப் பிரிவுத் தலைவர் ஏ.அருந்தவசீலன், யாழ்.கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.ரி.கணேசலிங்கம் ஆகியோரும் காணப்படுகின்றனர். (படங்கள்: லக்ஸ்மன்)

## குறைந்த விலையில் கோழி, காடைக் குஞ்சுகள்

யாழ்ப்பாணம், நவ.7

அச்சுவேலியில் அமைந்துள்ள கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் குறைந்த விலையில் கோழிக்குஞ்சுகளும், காடைக்குஞ்சுகளும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கலப்பின ஒருநாள் கோழிக்குஞ்சு 60 ரூபாவாகவும், மூன்று மாத காடைக்குஞ்சு 100 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன.

தேவையான பண்ணையாளர்கள் தங்கள் பிரதேச கால்நடை வைத்திய அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

## வலி.கிழக்குப் பிரதேச சபை, புத்தூர்

## கேள்வி அறிவித்தல் - 2009

கீழ்க் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2009ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :07.11.2008 -18.11.2008 நண்பகல் 12 மணிவரை

கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :19.11.2008 நண்பகல் 12 மணிவரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:19.11.2008 பி.ப.1 மணி

*(கேள்விப் பத்திரம் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விப் பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)*

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி ''செயலாளர், வலி. கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம் புத்தூர்'' என்ற முகவரிக்கும் இணைப் பிரதி ''பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி (ரெலிக்கொம் அருகில்), யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் 19.11.2008 நண்பகல் 12 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடிய வாறு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

| இல. விவரம் | கேள்விப் பத்திரப் பணம் (வற் நீங்கலாக) | மீளளிக்கக் கூடிய வைப்புப் பணம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|
| அச்சுவேலி உப அலுவலகம் | | | |
| 1. அச்சுவேலி பொதுச்சந்தை (துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் உட்பட) | 500.00 | 2000.00 | 845000.00 |
| 2. வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 100.00 | 250.00 | 15750.00 |
| 3. அச்சுவேலி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 131775.00 |
| 4. அச்சுவேலி கோழி இறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 17250.00 |
| 5. அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 32500.00 |
| 6. அச்சுவேலி சந்தை சுற்றாடல் வாகனத் தரிப்பு நிலையம் | 250.00 | 500.00 | 44625.00 |
| கோப்பாய் உப அலுவலகம் | | | |
| 1) கோப்பாய் வடக்கு பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 13400.00 |
| 2) இருபாலை பொதுச் சந்தை | 200.00 | 500.00 | 16000.00 |
| 3) கோப்பாய் வடக்கு மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 52500.00 |
| 4) இருபாலைச் சந்தி மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 80325.00 |
| 5) இருபாலை மாட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 11500.00 |
| 6) கோப்பாய் வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 100.00 | 250.00 | 2500.00 |
| உரும்பிராய் உப அலுவலகம் | | | |
| 1) உரும்பிராய் மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 84300.00 |
| 2) ஊரெழு மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 28050.00 |
| 3) உரும்பிராய் ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 42300.00 |
| 4) ஊரெழு ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 4500.00 |
| 5) உரும்பிராய் மத்திய சந்தை | 500.00 | 2000.00 | 33550.00 |
| புத்தூர் உப அலுவலகம் | | | |
| 1) புத்தூர் பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 500.00 | 2000.00 | 52800.00 |
| 2) புத்தூர் பொதுச் சந்தை | 250.00 | 500.00 | 57750.00 |
| 3) புத்தூர் பொதுச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 500.00 | 7250.00 |
| 4) ஆவரங்கால் பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 9750.00 |
| நீர்வேலி உப அலுவலகம் | | | |
| 1) நீர்வேலி மாட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 28050.00 |
| 2) நீர்வேலி ஆட்டிறைச்சிக் கடை | 250.00 | 500.00 | 7000.00 |
| 3) நீர்வேலி மீன் சந்தை | 100.00 | 250.00 | 3800.00 |
| 2) நீர்வேலி பொதுச் சந்தை | 100.00 | 250.00 | 7200.00 |

**குறிப்பு.**

01.சந்தையிலிருந்து ஒரு கிலோ மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

02.கேள்விப் பத்திரங்களை பெறவிரும்புவோர் தத்தமது கிராம சேவகரிடமிருந்து பெற்றுக் கொண்ட வதிவிடச் சான்றிதழ், கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் உப அலுவலகங்களிற்கு சமுகமளிக்க வேண்டும்.

03.கேள்விப் பத்திரப் பணம், சித்திபெற்ற கேள்வித் தொகை என்பவற்றிற்கு ஒப்பந்தம் எழுதும்போதுள்ளபடி வற் (VAT) வரியினைச் செலுத்துதல் வேண்டும்.

04.இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவம் பெறுபவர்கள் தங்களது முன்னனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும் முன்பு கடை நடத்திய உள்ளூராட்சி மன்றத்திட மிருந்து எதுவித நிலுவையும் இல்லையென உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. மேலதிக விவரங்களையும், விண்ணப்பப் படிவத்தினையும் அலுவலக நேரத்தில் உப அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலி.கிழக்கு பிரதேசசபை
தலைமை அலுவலகம்,
புத்தூர்.
05.11.2008

தம்பையா நடராசா
செயலாளர்.

## நிகழ்வுகள்

வடமராட்சி, நவ.7

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வுத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு செல்வி ஷாலினி மனோகரக் குருக்களின் இன்னிசை நிகழ்வு பக்கவாத்தியங்கள் சகிதம் இடம்பெறும். (202-236)

* * *

வடமராட்சி, நவ.7

யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலின் கீழ் பாடசாலைகள் ஒன்றிணைந்து நடத்தும் கல்வித்தினம் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா, யுனிசெவ் நிறுவனத்தின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் செல்வி ராதிகா வேலுப்பிள்ளை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். வடமராட்சிப் பாடசாலைகளின் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (202-236)

* * *

வடமராட்சி, நவ.7

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டிய 'ஒரு புத்தகம் ஒரு சமுதாயம்' என்னும் நிகழ்வும், புத்தகக் கண்காட்சியும் பருத்தித்துறை பிரதேச சபையின் ஏற்பாட்டில் எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு புலோலி பொது நூல்நிலையத்தில் நடைபெறவுள்ளன.

சபையின் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரபல மூத்த எழுத்தாளர் புலோலியூர் க.சதாசிவம் எழுதிய ''அழியாத கோலங்கள்'' சிறுகதைத் தொகுதியின் ஆய்வுரை இடம்பெறும்.

இளைப்பாறிய பிரதேச செயலர் வே.வீரபத்திரபிள்ளை இச்சிறுகதைத் தொகுதியை ஆய்வுரை செய்வார். தொடர்ந்து புத்தகக் கண்காட்சி இடம்பெறும். (202-236)

## அரச திணைக்களத்தின் வகுப்பு I, II உத்தியோகத்தர்களுக்கு மூன்று சம்பள ஏற்றங்கள் வழங்குமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.7

அரச திணைக்கள அலுவலகங்களில் நாடளாவிய சேவையொன்றில் அல்லது அதற்குச் சமமான சம்பளத்தையுடைய பதவியொன்றில் கடமைபுரியும் வகுப்பு I, வகுப்புII உத்தியோகத்தர்களுக்கு மூன்று சம்பள ஏற்றங்கள் வழங்கப்படல் வேண்டுமென வடக்கு மாகாண பொது நிர்வாக செயலக பிரதிப் பிரதம செயலாளர் அறிவித்துள்ளார்.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நான்கு சம்பள ஏற்றங்கள் அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் புதிய சம்பள மாற்றீட்டுத் திட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டு மேலதிகமாக அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சம்பள ஏற்றங்களைக் கடந்த செப்ரெம்பர் மாதம் தொடக்கம் ஆறு மாத தவணை களில் அந்த உத்தி யோகத்தர்களிடமிருந்து அறிவிடுமாறும் அவர் அறிவித்துள்ளார்.

நாடளாவிய சேவையில் இலங்கை நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, திட்டமிடல் சேவை, கல்வி நிர்வாக சேவை, விஞ்ஞான சேவை ஆகியவை இதில் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## ஏகாதசி விரதம்

யாழ்ப்பாணம், நவ.7

அளவெட்டி தெற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி விரதம் நடைபெறவுள்ளது.

விசேட அபிஷேக ஆராதனை பூசை காலை 8 மணிக்கு இடம் பெறும். அதனைத் தொடர்ந்து சமயச் சிறப்புச் சொற்பொழிவு, வசந்த மண்டபப் பூசை, ஏகாதசித் தீர்த்தம் என்பன இடம்பெறும். (204-160)


புதிய பிரிவுகள் ஆரம்பம்

**External Degree**

(Jaffna University)

* GAQ, BA -1, BA (Final)
* 1st in com, Bcom (part 1),
* Bcom (part II), Bcom (Final)

ஆகிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம் - 08.11.2008

**Banking Course**

CBF & DBF

Medium - Tamil & English Exam - mar 2009

புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகின்றன.

Further Details:
Director
Jaffna College Undergraduate Dept,
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.



**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**
நாதன்ஸ் சினிமா முன்பாக (மேல்மாடியில்)

Spoken English with grammer
சிங்களம்
Short hand Typing ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.
புதிய பிரிவு ஆரம்பம் : 08.11.2008
வெளிநாடு செல்பவர்களுக்கு ஆங்கிலம் இலகுவான முறையில் எழுத, வாசிக்க, பேசக் கற்றுக் கொடுக்கப்படும்.
ஆங்கிலம் பேச வேண்டுமா? விரைந்து வாருங்கள்.
விண்ணப்பங்கள் மட்டுப்படுத்தப்படும்.
பாடமுடிவில் ''சான்றிதழ்'' வழங்கப்படும்.
நிர்வாகி: இ.லோகநாயகி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளின் அடுத்த கல்வியாண்டுக்கான தவணை, விடுமுறை விவரங்கள் அறிவிப்பு

அச்சுவேலி, நவ.7

2009ஆம் ஆண்டுக்கான- அடுத்த கல்வி ஆண்டுக்கான- பாடசாலைத் தவணைக் காலம், விடுமுறை தொடர்பான விவரங்கள் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் 2008/44ஆம் இலக்க 2008.11.04ஆம் திகதிய சுற்றறிக்கையில் அடுத்தவருடத்துக்கான பாடசாலைத் தவணை விடுமுறை மற்றும் வருடத்தில் பாடசாலை நடைபெறவேண்டிய நாள்களின் எண்ணிக்கை என்பன அறிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ், சிங்கள பாடசாலைகளுக்கான தவணைக் கால விவரம்:

**முதலாம் தவணை:** ஜனவரி 5ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 8ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

**இரண்டாம் தவணை:** ஏப்ரல் 21ஆம் திகதி தொடக்கம் ஜூலை 31ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

**மூன்றாம் தவணை:** ஒகஸ்ட் 31ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 9ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

முஸ்லிம் பாடசாலைகளுக்கான தவணைக் கால விவரம்:

**முதலாம் தவணை:** ஜனவரி 5ஆம் திகதி முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

**இரண்டாம் தவணை:** ஏப்ரல் 20ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 20ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

**மூன்றாம் தவணை:** செப்ரெம்பர் 22ஆம் திகதி முதல் டிசெம்பர் 9ஆம் திகதி வரை (இரண்டு தினங்களும் உட்பட).

2009ஆம் ஆண்டில் பாடசாலைகள் 202 தினங்களுக்குக் குறையாமல் செயற்பட வேண்டும். அதற்குப் பொருத்தமான முறையில் பாடசாலை நாள்கள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றறிக்கை மாகாணக் கல்வி அமைச்சுகள், மாகாணக் கல்வித் திணைக்களம், வலயம், கோட்டம் உட்பட சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (202-11)

### மின்சாரம் தடைப்பட்ட நேரத்தில் கடைகளில் திருட்டு

மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் இருகடைகள் உடைக்கப்பட்டு ஒரு கடையில் மட்டும் பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் அண்மையில் சித்தன்கேணியில் இடம்பெற்றுள்ளது.

சித்தன்கேணிச் சந்தியில் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகில் உள்ள கடைகளே உடைக்கப்பட்டுள்ளன.

பலசரக்கு விற்பனை நிலையத்துக்குள் ஓடு பிரித்து இறங்கிய திருடர்கள் அங்கிருந்து பெறுமதிமிக்க பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

அதன் அருகில் உள்ள தொலைத்தொடர்பு நிலையத்துக்குள்ளும் ஓடு பிரித்துத் திருடர்கள் இறங்கியுள்ளனர். எனினும் அங்கு பொருள்கள் எவையும் திருடப்படவில்லை என அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (202-29)

## இரவு வேளைகளில் வளர்ப்பு நாய்களுக்கு இனந்தெரியாதோர் நஞ்சூட்டுகின்றனர்

### சங்கானைப் பகுதியில் அதிகரிக்கும் சம்பவங்கள்

யாழ்ப்பாணம், நவ.7

சங்கானைப் பிரதேசத்தில் வீடுகளில் உள்ள வளர்ப்பு நாய்கள் இனந்தெரியாதவர்களால் நஞ்சூட்டப்பட்டு கொல்லப்படுட்டு வருகின்றன.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் மக்கள் திண்டாடுகின்றனர்.

கடந்த இரு வார காலத்தில் சங்கானை தேவாலய வீதியில் மட்டும் சுமார் பத்திற்கும் மேற்பட்ட வீட்டு உரிமையாளர்களின் நாய்களை இரவில் இனந்தெரியாதோர் நஞ்சூட்டிக் கொலை செய்துள்ளனர்.

இதேவேளை-

இப்பிரதேசத்தில் இரவு நேரங்களில் இனந்தெரியாதோரின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதாகவும் அப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவுவேளைகளில் திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவர்களுக்கு நாய்கள் பெரும் இடைஞ்சலாக இருப்பதாலேயே அவற்றை சம்பந்தப்பட்டவர்கள் நஞ்சூட்டிக் கொலை செய்கின்றனர் எனப் பொதுமக்கள் கருதுகின்றனர். (202-86)

## பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் 67 உட்கட்டுமான அபிவிருத்திப் பணிகள்

### 'நெக்டெப்' திட்டத்தின் கீழ் நடைபெறுகின்றன

வடமராட்சி, நவ.7

பருத்தித்துறைப் பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 'நெக்டெப்' திட்டத்தின்கீழ் பல்வேறு உட்கட்டுமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 30 திட்டங்கள் பூர்த்தியாகியுள்ளன.




இத்திட்டத்தின் கண்காணிப்பு உத்தியோகத்தர் இத்தகவலைத் தெரிவித்தார்.

மேற்படி பிரதேச செயலர் பிரிவில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் 'நெக்டெப்' திட்டத்தின்கீழ் 67 உட்கட்டுமான வேலைத்திட்டங்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. இவற்றுள் 30 திட்டங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

ஏனைய வேலைத்திட்டங்களும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-236)

### யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த

## விசேட தேவையுடைய மாணவருக்கு அழகியல், விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், நவ.7

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த விசேட தேவையுடைய மாணவர்களிடையே அழகியல், விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

தனிநடனம், குழுநடனம், தனிப்பாட்டு, கதைகூறல், பேச்சு, சிறுவர் நாடகம் ஆகிய போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி யாழ். வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் யாழ். கல்வி வலய விசேட கல்வி ஆசிரியருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதே வேளை உடற்பயிற்சி போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான பயிற்சிகள் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளன. (202-72-302)

## மாவட்ட பரதநாட்டியப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகம் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ.7

வட மாகாண பண்பாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை பிரதேச செயலகங்களுக்கிடையே நடத்திய பரதநாட்டியப் போட்டிகளில் இரு பிரிவுகளிலும் கோப்பாய் பிரதேச செயலகம் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளது.

போட்டிகள் யாழ்.பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி எலிசன் தலைமையில் வேம்படி பெண்கள் உயர்தரப் பாட சாலை மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர்ப் பிரதேச செயலாளர் பா.செந்தில் நந்தனன் கலந்து கொண்டார்.

வெற்றியீட்டிய பிரதேச செயலகங்களின் விவரம் வருமாறு:

நடனம் (குழு)

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உரும்பிராய் கலைக் கோவில் மன்றம் , உடுவில் பிரதேசத்தைச் சேர்ந்த இணுவில் இளந் தொண்டர் சபை, சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பொன்னாலை சந்திர கலாலய மன்றம் .

தனிநடனம்

கோப்பாய்ப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த உரும்பிராய்க் கலைக்கோயில் மன்றம், சங்கானைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பொன்னாலை சந்திர பரத கலாலய மன்றம் , யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த இளைஞர் கலைக் கோவில் கழகம் .

(202-168)

## அச்சுவேலி தெற்கு பயித்தோலை வீதி 30 வருடங்கள் கடந்தும் திருத்தப்படவில்லை

### புனரமைக்க உதவுமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

அச்சுவேலி, நவ.7

அச்சுவேலி தெற்கில் 30 வருடங்களாகியும் திருத்தி அமைக்கப்படாமல் இருக்கும் பயித்தோலை வீதியை- 10ஆம், 11ஆம் வட்டாரங்களுக்கு இடையிலான எல்லை வீதியை- திருத்தி அமைத்து பொதுமக்களின் இயல்பான போக்குவரத்துக்கு வசதி செய்யுமாறு அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ்.அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி கோரிக்கை அடங்கிய மகஜரை யாழ்.அரசாங்க அதிபர் கே.கணேஷிடம் நேரில் கையளித்து கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதி வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸிடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

அச்சுவேலி தெற்குப் பயித்தோலை வீதி கடந்த 30 வருடங்களுக்கு மேலாக திருத்தி அமைக்கப்படாமல் உள்ளது. பெரிய அளவிலான குழிகள் மற்றும் கல்லுகள் நிறைந்த நிலையில் அந்த வீதி விளங்குகின்றது.

இந்த வீதி ஆவரங்கால்- வல்லை பிரதான வீதியையும் ஆவரங்கால்- அச்சு வேலி பிரதான வீதியையும் இணைக்கும் மிகவும் முக்கியமான வீதியாகும். பிரதான வீதிகளில் போக்குவரத்துத் தடைகள் ஏற்படுகின்றபோது இந்த வீதி பொதுப் போக்குவரத்துப் பாவனைக்கு உரியதாகவும் உள்ளது.

இவ் வீதியைப் பயன்படுத்தும் பொது மக்கள், வீதியில் மாரிகாலத்தில் வெள்ளம் நிரம்பி இருப்பதால் பல்வேறு சிரமங்களுக்கு உள் ளாகின்றனர்.

பாடசாலை மாணவர்கள், பாதசாரிகள் மழைவெள்ளம் தேங்கி நிற்கும் நேரங்களில் பயணம் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

எனவே இவ் வீதியைத் திருத்தி அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு அச்சுவேலி தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

(202-11)

## கல்விமாணி விரிவுரைகள்

யாழ்ப்பாணம், நவ.7

தேசிய கல்வி நிறுவன கல்விமாணிப் பட்டநெறி முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரையும் நடைபெறும் எனத் தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் இ.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (1)



தீவகம் தெற்கு வேலணைப் பிரதேச சபையின் உள்ளூராட்சி வாரப் பெருவிழா அண்மையில் நடைபெற்றது.

பிரதேச சபையின்செயலாளர் கை.மகேந்திரலிங்கத்திற்கு சிறந்த நிர்வாகிக்கான விருதையும், கு.யோகராசாவுக்கு நீண்டகாலம் சிறந்த சேவையாற்றியமைக்கான விருதையும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி செந்தகுமார் வழங்கிக்கௌரவிப்பதை முதலிரு படங்களிலும் விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பர்மலை சலாம் முன்பள்ளியும் வல்வெட்டித்துறை ஸ்ரீமுருகன் முன்பள்ளியும் இணைந்து நடத்திய விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறைக் கிளை முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் மாணவி ஒருவருக்குப் பரிசில் வழங்குகின்றார். அருகில் முன்பள்ளி ஆசிரியைகள் து.கம்சானந்தி, வி.தனுஷா ஆகியோர் காணப்படுகின்றனர்.

## வேலணைப் பிரதேசசபை செய்தியாளர்களைக் கௌரவித்தது

நல்லூர்,நவ.7

வேலணைப் பிரதேச சபை தனது பிரிவுக்கு உட்பட்ட செய்தியாளர்களைக் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.

வேலணைப் பிரதேச செய்தியாளர்களான இ.சற்குணநாதன், என்.இராமச்சந்திரன் ஆகிய இரு செய்தியாளர்களும் செய்தித்துறையில் 40 ஆண்டுகள் பணியாற்றி வருகின்றமையைப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமாரினால் வேலணைப் பிரதேச சபையின் சார்பில் பிரதேச உள்ளூராட்சி வார விழாவில் வைத்து விருதுகள் வழங்கப்பட்டன. (202-111)

## சாவகச்சேரி நகரசபைப் பகுதியில் நாய்களுக்கு பராமரிப்பு அட்டைகளும் இலக்கத் தகடும்

சாவச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு பராமரிப்பு அட்டைகளும் இலக்கத் தகடுகளும் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் அந்தந்த பிரிவு சனசமூக நிலையங்களில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன என நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 10ஆம் திகதி மீசாலை கிழக்கு பிரிவிலும், 11ஆம் திகதி மீசாலை மேற்குப் பிரிவிலும், 12ஆம் திகதி நுணாவில் மேற்கு, கற்குழி ஆகிய பிரிவுகளிலும்-

13ஆம் திகதி நுணாவில் கிழக்கு, கல்வயல் ஆகிய பிரிவுகளிலும், 14ஆம் திகதி கிராம்புவில், கெருடாவில், சாவகச்சேரி வடக்கு ஆகிய பிரிவுகளிலும்-

17ஆம் திகதி சங்கத்தானை, பெரியமாவடி ஆகிய பிரிவுகளிலும், 18ஆம் திகதி கோயிற் குடியிருப்புப் பிரிவிலும் நகரசபை உத்தியோகத்தர்களால் வளர்ப்பு நாய்களுக்குப் பராமரிப்பு அட்டையும், இலக்கத் தகடுகளும் வழங்கப்படுமெனவும் அவர் அறிவித்துள்ளார். (202-207)


## அரசாங்க அதிபர் ஊடாக விஷேட அடையாள அட்டை வழங்கல்

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியத்தின் சகல அங்கத்துவ குருமார்கள், மாணவர்கள் அனைவரின் நலன் கருதி அரசாங்க அதிபர் ஊடாக விஷேட அடையாள அட்டை வழங்கப்பட இருப்பதால் அனைத்து அந்தணர்களும் தங்கள் விவரங்களை 14.11.2008 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக பதிவு செய்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்,
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

செயலாளர்.

(79686)


## செம்மணிப் பகுதி விவசாயிகள் மழை வேண்டிப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,நவ.7

செம்மணிப் பகுதி வயல்களில் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகள் மழை வேண்டி நாயன்மார்க்கட்டு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் விசேட அபிஷேக ஆராதனைகளை இன்று நண்பகல் நடத்தவுள்ளனர்.

தொடர்ந்து கஞ்சி வார்த்தலும் இடம் பெறும்.

(203)

## நன்றித் திருப்பலி

யாழ்ப்பாணம்,நவ.7

இலங்கை வங்கியின் ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ.அருமைநாயகத்திற்கான நன்றித் திருப்பலி ஆராதனை நாளை சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு யாழ்.மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படவுள்ளது.

(204)

## கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு நிதி

யாழ்ப்பாணம், நவம்பர்.7

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் யாழ். கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு நிதி வழங்கப்படவுள்ளது.

இந்த நிதி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். செயலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, இலங்கை வங்கி யாழ். உதவிப் பொது முகாமையாளர் என்.சிவரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (204)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 18 . 04 . 1928



மறைவு 30 . 10 . 2006

### அமரர் செல்லையா தியாகராஜா

(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்-I)

என்றிரு கண்ணைப் சிறப்புடன் வாழ்வித்த
பிராண நாயகரே!
அன்பால் அரவணைத்து, பாரினில் நாம் சிறக்க
வழியமைத்த அப்பாவே!
பாசத்துடன் ஓராட்டிய அருமைத் தாத்தாவே!
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள்
நினைவுகள் என்றென்றும் நிறைந்திருக்கும்
தங்கள் ஆத்மா இறைவன் பாதத்தில்
இன்புற்றிருக்க வேண்டுகின்றோம் எந்நாளுமே!

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(79675)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மகாவித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியையாகக் கடமையாற்றிய

திருமதி
நிர்ற்றா ஞானதீபம் சுகந்தநாதன்
(சங்கீத பூஷணம் B.A.Dip.in.Ed.)

கால் நூற்றாண்டாக நற்பணியாற்றி தனது அறுபதாவது அகவையில் இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை ஓய்வு பெறுகின்றார். இவரது சேவையின் நிறைவை பாடசாலைச் சமூகம் மனமகிழ்வோடு பாராட்டி வாழ்த்துவதோடு நீடூழி காலம் நலமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

பா/புனித ஜேம்ஸ்
மகா வித்தியாலயம்.

பாடசாலைச் சமூகம்.

(79685)



## வேப்பமரம் விற்பனைக்கு

10' நீளம், 9'சுற்றுடைய வேப்பமரம் (வெட்டியது) விற்பனைக்குண்டு.

முகவரி: இல.06,நந்தாவில் ஒழுங்கை,
(இராம கிருஷ்ண மிசன் பாடசாலை பின் ஒழுங்கை), கொக்குவில் கிழக்கு.

தொடர்பு கொள்ளும் நேரம்:
புதன், வெள்ளி, சனி, ஞாயிறு கிழமைகளில் மட்டும்.
காலை: 10 மணி தொடக்கம் 12 மணி வரை
மாலை: 4 மணி தொடக்கம் 5.30 மணிவரை

(79631)



## தசாஹ கிருஹயக்ஞ அழைப்பு

நிகழும் சர்வதாரி வருடம் ஐப்பசி மாதம் 13ஆம் நாள் (29.10.2008) புதன் கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தவரும் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார், கைதடி வீரகத்திப் பிள்ளையார், மல்லாகம் குழமங்கால் ஞானவைரவர், மல்லாகம் தோட்டத்து ஞானவைரவர், அளவெட்டி தம்மளை சிவன், ஏழாலை அம்பலவாணேசுரர், சிறுவிளான் எலிப்பிள்ளையார், சம்பாவழிப் பிள்ளையார் கோயில்களின் முன்னாள் பூசகருமான



பிரம்மஸ்ரீ
வைத்தீஸ்வரக் குருக்கள்
ஞானசேகர ஐயர்

அவர்களின் தகாகக் கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும்.

இன்று ஐப்பசி 22ஆம் நாள் (07.11.2008) வெள்ளிக்கிழமை
காலை 8.00 மணியளவில் தசாக கிரியைகள் ஆரம்பமாகும்.
ஐப்பசி 23ஆம் நாள் (08.11.2008) சனிக்கிழமை
காலை 10.00 மணிக்கு ஏகோதிஷ்டம் மாசியம்
ஐப்பசி 24ஆம் நாள் (09.11.2008) ஞாயிற்றுக்கிழமை
காலை 10.00 மணிக்கு சபீண்டீகரணம்.
ஐப்பசி 25ஆம் நாள் (10.11.2008) திங்கட்கிழமை
காலை 10.00 மணிக்கு கிருஹயக்ஞம், சமாராதனை (மதியபோசனம்).

கிரியைகளில் பங்குபற்றும்படி அனைவரையும் அழைக்கின்றோம்.

கும்பிழாவளைப்
பிள்ளையார் கோயிலடி,
அளவெட்டி மத்தி, அளவெட்டி.

வைதிக குரு:
பிரம்மஸ்ரீ.ஐ.ஞானக்குருக்கள்
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.



## VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA

The Vavuniya Campus of the University of Jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned posts up to 21.11.2008. **Applications with pending results may also be considered.**

**FACULTY OFAPPLIED SCIENCE**

**(1) Department of Biological Science**

**Demonstrator (on contract)**

Preference will be given to those who have degree in the following field.

(i) B.Sc. in Environmental Science
(ii) B.Sc. in Agriculture
(iii) B.Sc. General/Special Degree with Subjects: Chemistry/Botany/Zoology.

**(2) Department of Physical Science**

**(I) Demonstrator (on contract) ICT**

Preference will be given to those who have degree in the following field.

(i) B.Sc. General/ Special Degree with subjects Computer Science/Information Technology

**(II) Tutor (on Contract)**

Preference will be given to those who have degree in the following field.

(i) B.Sc. General/ Special Degree with subjects Mathematics/Computer Science/Statistics

Method of Application:- The application should be made in the prescribed application forms obtainable from the Senior Assistant Registrar/Administration & Establishment, Vavuniya Campus **OR** Senior Assistant Registrar, Establishment Branch, University of Jaffna by paying Rs.100/-. Those who wish to obtain application forms and further particulars by post should send a money order for Rs.100/- drawn in favour of Senior Assistant Bursar, Vavuniya Campus of the University of Jaffna, payable at post office, Vavuniya with a self addressed stamped envelope. Completed application forms should be sent to the **Senior Assistant Registrar/Administration & Establishment, Vavuniya Campus of the University of Jaffna, Park Road, Vavuniya** under registered cover.

**RECTOR,**
**VAVUNIYA CAMPUS OF THE UNIVERSITY OF JAFFNA,**
**PARK ROAD, VAVUNIYA.**
**06.11.2008**

(C.555219)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கெதிரான போரை நிறுத்தாவிட்டால் திரையுலகின் போராட்டம் எரிமலையாக வெடிக்கும்!

## சென்னையில் 'பெப்ஸி' புதன்கிழமை நடத்திய உண்ணாவிரதத்தில் சரத்குமார் எச்சரிக்கை

சென்னை, நவ. 7



ஈழத் தமிழர்களுக்கு எதிரான போர் நிறுத்தப்படும் வரை திரையுலகினரின் போராட்டம் எரிமலையாகத் தொடர்ந்து வெடித்துக் கொண்டே இருக்கும்.

- இவ்வாறு நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் நேற்றுமுன்தினம் நடந்த உண்ணாவிரதத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் தமிழர்கள் மீது நடத்தப்படும் அரக்கத்தனமான தாக்குதலைக் கண்டித்து தென்னிந்தியத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனம் சார்பில் சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு-

நம்முடைய சகோதரர்கள் இலங்கையில் இருக்க இடம், உண்ண உணவு, உடுக்க உடை இல்லாமல் காடுகளில் திரிந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் இலங்கை அரசின் கண்மூடித்தனமான - அரக்கத்தனமான - காட்டுமிராண்டித்தனமான இராணுவத் தாக்குதலே.

எந்த இடத்தில் தமிழன் பாதிக்கப்பட்டாலும் குரல் எழுப்புவது அவசியமான ஒன்று. அந்த வகையில் திரையுலகினரால் இராமேஸ்வரத்தில் விதைக்கப்பட்ட போராட்டம் இன்று அடுத்தடுத்த கட்டங்களை எதிர்நோக்கி வருகிறது.

இன்று உலக நாடுகளின் பார்வை இலங்கை மீது திரும்பியுள்ளது. அதற்குக் காரணம் கலையுலகம் தொடர்ந்து நடத்தி வரும் போராட்டங்கள்தான். இந்த விடயத்தில் தமிழர்களின் குரலுக்கு மத்திய அரசு செவி சாய்த்து இலங்கையில் நடைபெற்று வரும் போரை உடனே நிறுத்த வேண்டும்.

இறையாண்மை பற்றி பலரும் பேசுகிறார்கள். பக்கத்து வீட்டில் ஒருவன் தன் மக்களைக் கொலை செய்தால் அதைத் தடுக்காமல் இறையாண்மைப்படி பார்த்துக்கொண்டிருக்கவா முடியும்? மனிதாபிமான அடிப்படையில் அதை தட்டிக்கேட்கத்தான் செய்வோம்.

அரசியல் காரணங்களைக் காட்டி இலக்கிலிருந்து திசைதிருப்பும் முயற்சிகளைச் செய்யக் கூடாது. அரசியலுக்கு அப்பாற்பட்டு மனிதநேய அடிப்படையில் அனைவரும் ஒன்றுபட்டால் நம்முடைய போராட்டத்துக்கு வெற்றி கிடைக்கும்.

இலங்கையில் போர்நிறுத்தம் ஏற்படும் வரை திரையுலகினரின் போராட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் - என்றார்.

## தனி ஈழம் பிறந்தே தீரும்; தமிழா; சோர்ந்து விடாதே!

இயக்குநர் ராஜேந்தர் பேசியவை வருமாறு-



"ஈழத் தமிழர்களைப் போன்ற ஒரு பாவப்பட்ட இனத்தை உலகில் வேறு எங்கும் பார்க்க முடியாது. கர்நாடகாவைச் சேர்ந்தவர்கள், மராட்டியத்தைச் சேர்ந்தவர்கள், பஞ்சாபிகள் தாக்கப்பட்டால், அந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்களா? தமிழர்களுக்கு மட்டும் ஏன் இந்த நிலை?

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும். அதுவரை தமிழ் இன உணர்வு தீ பற்றிக் கொண்டே இருக்கும். தனி ஈழம் பிறந்தே தீரும். தமிழா, அதுவரை சோர்ந்து விடாதே - என்றார்.

## யுத்தத்தை நிறுத்தாவிட்டால் எமது போராட்டம் தொடரும்

தமிழகத் திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர் விஜயன் பேசியவை வருமாறு-

இலங்கையில் உடனடிப் போர் நிறுத்தம் ஒன்றே எல்லாப் பிரச்சினைகளுக்கும் முதல் தீர்வு. அதற்கு மத்திய அரசு உரிய வழிகளைச் செய்ய வேண்டும்.

இன்று ஒருநாள் மட்டும் போராட்டம் நடத்திவிட்டு கலைந்து சென்றுவிடுவோம் என யாரும் நினைத்துவிடக் கூடாது. இந்தப் போராட்டத்துக்குப் பலன் இல்லையென்றால் அடுத்தடுத்துப் போராட்டங்கள் தொடரும். வேலைநிறுத்தமும் நடைபெறும். இலங்கையில் போரை நிறுத்தும் வரை போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கும் என்பதுதான் 24 சங்கங்கள் அடங்கிய 'பெப்ஸி' அமைப்பு நடத்தும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தின் முக்கிய தீர்மானம் - என்றார்.

## சிங்கள இராணுவத்திடமிருந்து காப்பாற்ற என் தம்பியை குப்பைத்தொட்டியில் மறைத்தேன்

நடிகை ராதிகா சரத்குமார் பேசியவை வருமாறு-



"நான், இலங்கையில் படித்து வளர்ந்தவள். சிறுமியாக இருக்கும்போதே தமிழர்கள் மீதான இலங்கை அரசின் தாக்குதல்களை நேரில் பார்த்தவள். கலவரம், தீவைப்பு, சிங்கள இராணுவத்தின் வெறித்தனமான தாக்குதல்களுக்கு மத்தியில் நானும், என் தம்பியும் ஒருமுறை சிக்கிக்கொண்டோம்.

என் தம்பியை குப்பைத் தொட்டியில் மறைத்து வைத்து, அவன் உயிரைக் காப்பாற்றினேன். அந்த போராட்டம் இன்னும் ஓயவில்லை. இலங்கைத் தமிழர்கள் அன்பானவர்கள். அவர்கள் யாரிடமும் கையேந்த மாட்டார்கள். - என்றார்.

## இந்திய அரசே போரை நிறுத்து

நடிகர் விஜய் பேசியவை வருமாறு-



இலங்கைத் தமிழர்களுக்காக நடிகர் சங்கம் நடத்திய உண்ணாவிரதத்தில் பேசும்போது, இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்படவேண்டும். தமிழர்கள் காப்பாற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி பிரதமருக்கு எனது ரசிகர்கள் தந்திகள் அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டேன்.

அதைத்தொடர்ந்து இரண்டு நாட்களில், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தந்திகள் அனுப்பப்பட்டிருக்கின்றன எனக் கேள்விப்பட்டேன். அதற்காக, என் ரசிகர்களுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இதோடு நின்று விடாமல், இன்னும் நிறைய தந்திகள் போய் சேர வேண்டும். ஈழத் தமிழருக்கு எதிரான போரை இந்திய அரசு உடன் தடுத்து நிறுத்தவேண்டும். - என்றார்.

## தமிழன் மனதில் வன்முறை கிடையாது



பாடலாசிரியர் தாமரை பேசியவை வருமாறு-

மொழி, பண்பாடு அடிப்படையில் தேசிய இனங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. தமிழனும் ஒரு தேசிய இனம்தான். தமிழன் மனதில் வன்முறை கிடையாது. வந்தாரை வாழ வைப்பான். போரை நிறுத்து, ஆயுதம் கொடுப்பதை நிறுத்து என்று நாம் கேட்கிறோம். ஆனால் இன்னும் போர் நிற்கவில்லை.

18 வருடங்களுக்குப் பிறகு தமிழனுக்கு ஓரளவு சொரணை வந்து இலங்கை தமிழர்களுக்காகப் பேசத் தொடங்கியிருக்கிறான். உணர்வை மட்டுமே காட்ட வேண்டும் என்றால், எல்லோரும் கூடி ஒப்பாரி வைத்து விட்டு செல்லலாமே. போர்ராட்டம் என்பது நமது கோரிக்கைகளை முன்வைப்பதாகும்.

இலங்கையில் போர் நிறுத்தப்படவில்லை. இந்திய அரசு போரை நிறுத்தச் சொல்லவில்லை. போரை நிறுத்த தமிழக அரசு வற்புறுத்தவில்லை. இங்கு நடப்பது எல்லாமே நாடகம்.

ஈழம் கிடைத்தால், தமிழ்நாடு, கர்நாடக நாடு, மலையாள நாடு என்று பிரிந்துவிடும் என்ற அஞ்சுகிறார்கள். இப்போதே அத்தகைய குரல்கள் ஒலிக்கத் தொடங்கி இருக்கின்றன. முதலில் தமிழனாய் இருப்போம். இந்தியனாக இருப்பது பற்றி பிறகு பேசிக்கொள்ளலாம்.

நிவாரண நிதி வசூலிக்கிறார்கள். இலங்கையிடம் இந்த நிதியைக் கொடுத்தால் ஒரு கையில் பாலையும், இன்னொரு கையில் விஷத்தையும் கொடுப்பது போலாகிவிடும். குண்டு போடுபவர்கள் தமிழர்களுக்கு நிவாரணத்தை கொடுப்பார்களா? - என்றார்.

## நாம் பேசுவதை நிறுத்தவேண்டுமென்றால் நீங்கள் போரை உடனடியாக நிறுத்துங்கள்

நேற்றுமுன்தின உண்ணாவிரதத்தில் பாரதிராஜா பேசியவை வருமாறு-



தமிழர்கள் மத்தியில் இன உணர்வு கடந்த 30 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக செத்துக்கொண்டு வந்தது. இராமேஸ்வரத்தில் நடந்த போராட்டத்துக்குப் பின், உணர்வுபூர்வமாக தமிழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இருக்கிறார்கள்.

இலங்கை அரசிடம், "போரை நிறுத்து" என்று சொல்ல மத்திய அரசுக்கு வலிமை இருக்கிறது. ஆனால் சொல்ல மறுப்பதைப் பார்த்தால், மத்திய அரசும் தமிழ் இனத்தை அழிக்க முயற்சிக்கிறதோ என்ற சந்தேகம் வந்து இருக்கிறது - என்றார்.

நாங்கள் பேசுவதனை நிறுத்த வேண்டும் என்றால் நீங்கள் போரை நிறுத்துங்கள்.

உலகத்திற்கு தமிழ் இருப்பதை, ஏன் தமிழைக் கொண்டு சென்றவன் இலங்கைத் தமிழன்தான். தமிழன் என்ற இனம் இருப்பதை உலகிற்கு பறை சாற்றுகின்றவன் இலங்கைத் தமிழன்தான். அத்தகைய தமிழனை நீ குண்டு போட்டு அழிக்கிறாய்.

இந்தியாவால் கடந்த நான்கு மாதங்களாக ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மத்திய அரசுதான் இதற்கு முதற்காரணம், சந்தேகமே கிடையாது - என்றார்.

## இந்தியச் செய்திகள்

## மரணத்தின் விளிம்பிலுள்ள ஈழத் தமிழருக்கு ஒன்றரை லட்சம் மூடை அரிசி, பருப்பு, துணி!


சென்னை, நவ.7

மரணத்தின் விளிம்பில் உள்ள ஈழத் தமிழருக்கு உதவுவதற்காக ஒன்றரை லட்சம் மூடைகளில் அரிசி, பருப்பு போன்ற தானியங்களையும் துணி வகைகளையும் அனுப்பிவைக்க இந்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

மேலும் இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு -

இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும், சிங்கள இராணுவத்துக்கும் இடையே தொடர்ந்து போர் நடந்து வருகிறது. அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள். போரை நிறுத்தும்படி தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை தமிழர்களுக்கு 800 தொன் உணவுப் பொருள்கள் அனுப்பப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது.



இதைத்தொடர்ந்து முதல்வர் கருணாநிதி இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரணப் பொருள்கள் வழங்கும்படி கேட்டுக் கொண்டார். நிவாரண நிதியாக ரூ. 7 கோடி இதுவரை கிடைத்துள்ளது. துணிமணிகள், அரிசி, பருப்பு போன்ற மளிகைப் பொருட்களை பல்வேறு அமைப்புகள் வழங்கி வருகின்றன.

அரசு துறையான கோ-ஆப்டெக்ஸ் மூலம் சுமார் ரூ. 6 கோடி மதிப்பிலான துணிகள் இலங்கைத் த[illegible]கிறது. தமிழகத்தில் உள்ள கோ-ஆப் டெக்ஸ் சங்கங்களில் இருந்து துணிகள் சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப் டெக்ஸ் திடலுக்கு கொண்டு வரப்படுகின்றன.

வேட்டி-1, சேலை-1, லுங்கி-1, நைட்டி-1, துண்டு-2, போர்வை-2 ஆகியவை கொண்ட பண்டல்களாகக் கட்டப்படுகின்றன. 80 ஆயிரம் பேர் பயன் பெறும் வகையில் தனித்தனி பண்டல்களாகக் கட்டி பெரிய சாக்குப் பைகளில் போட்டு தைத்து அனுப்பப்படுகின்றன.

துணிகள் பொதி செய்யும் பணி இரவு - பகலாக நடந்து வருகிறது. இந்தப் பணியில் 500 ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

"இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய - தமிழக மக்களிடம் இருந்து" என்ற வாசகம் கொண்ட 'ஸ்டிக்கர்' ஒவ்வொரு பொதியிலும் ஒட்டப்பட்டுள்ளது. கோ- ஆப்டெக்ஸ் நிர்வாக இயக்குநர் நிர்மலா, பொது மேலாளர்கள் குணசேகரன், விஜயகுமார் ஆகியோர் மேற்பார்வையில் பொதிகள் கட்டும் பணி நடந்து வருகிறது.

இதேபோல தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் சார்பாக 80 ஆயிரம் சிறு மூடைகள் அரிசி, பருப்புகள் அனுப்பப்படுகின்றன. 15 கிலோ அரிசி மூடை, 2 கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ சர்க்கரை, டீ தூள் பாக்கெட்-2, குளிக்கும் சோப்பு-1, சலவை சோப்பு-1, பற்பசை-1 ஆகியவை கொண்ட மூட்டைகளாக பொதி செய்யும் பணி சென்னையில் நடந்து வருகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு அரசு சார்பில் அனுப்பப்படும் நிவாரணப் பொருள்கள் மூடைகளாக [illegible] பின் துறைமுகத்துக்கு [illegible] செல்லப்பட்டு, அங்கிருந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பப்படவுள்ளன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒபாமாவின் பெருவெற்றியின் இரகசியம் 'நமக்குத் தேவை மாற்றம்' என்ற வாசகம்

வாஷிங்டன்,நவ.07

'நமக்குத் தேவை மாற்றம்' என்ற ஒற்றை கோஷத்தினால் அமெரிக்க ஜனநாயக வரலாற்றில் பராக் ஒபாமா பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறார்.

பராக் என்ற அரேபிய வார்த்தைக்கு 'ஆசிர்வாதிக்கப்பட்டவர்' என்று அர்த்தம். ஆபிரிக்க கறுப்பரான ஒபாமா , வெள்ளையர் நாடான அமெரிக்காவில் ஜனாதிபதியாகி அந்த அர்த்தத்துக்கு வலுச் சேர்த்துள்ளார்.

கறுப்பு இனத்தவர் சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்காவுக்கு அடிமைகளாக அழைத்து வரப்பட்டனர். ஆடு, மாடுகளைப் போல கூட்டம் கூட்டமாக விற்பனை செய்யப்பட்டு தலைமுறை தலைமுறையாக கூனிக்குறுகிக் கிடந்த அந்த இனத்துக்கு சுவாசக் காற்றாய் அமைந்தவர் ஆபிரகாம் லிங்கன்.

மார்டின் லூதர் கிங் விதைத்த விதை, 50 ஆண்டுகள் கழித்து கற்பக விருட்சமாக வளர்ந்து நிற்கின்றது. எந்த அமெரிக்காவில் சம உரிமைக்காக கறுப்பர்கள் போரடினார்களோ அதே அமெரிக்காவின் முதல் குடிமகனாக கறுப்பர் இனத்தைச் சேர்ந்த பராக் ஒபாமா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஒபாமாவின் தந்தை ஆபிரிக்கா கண்டத்திலுள்ள கென்யா நாட்டின் கறுப்பர் இனத்தைச் சேர்ந்தவர். ஹவாய் இனத்தைச் சேர்ந்தவர். ஹவாய் தீவுக்கு படிக்க வந்தபோது அமெரிக்காவைச் சேர்ந்த ஆன் துன்ஹம் என்ற வெள்ளை இனப் பெண்ணை காதலித்து மணமுடித்தார். அவர்களுடைய மணவாழ்க்கையின் அன்புப் பரிசாக, 1961ஆம் ஆண்டு ஒபாமா பிறந்தார்.

இரண்டு ஆண்டுகளில் தாய்-தந்தை இருவரும் விவாகரத்து செய்து கொண்டனர். தந்தை கென்யா சென்று விட்டார். அதே நேரத்தில், இந்தோனேஷியாவைச் சேர்ந்த லோலோ செயடோரா என்ற முஸ்லிம் ஒருவரை ஒபாமாவின் தாய் மறுமணம் செய்தார். அமெரிக்காவில் இருந்து இந்தோனேஷியாவுக்கு குடியேறிய ஆன்- லோலோ தம்பதி, சிறுவன் ஒபாமாவை தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

12 வயதுக்குப் பின் அமெரிக்கா திரும்பிய ஒபாமா, தாம் வழிப் பாட்டியின் அரவணைப்பிலேயே வளர்ந்தார். 1983 ஆம் ஆண்டு கல்லூரிப் படிப்பை முடித்தார். நியூயோர்க் மற்றும் சிக்காகோவில் சில வேலைகளை செய்து வந்த அவர், 1988ஆம் ஆண்டு ஹார்வர்டு சட்டக்கல்லூரியில் சேர்ந்தார்.

அங்குதான் தன்னுடைய வாழ்க்கையின் வசந்தத்தை சந்தித்திருக்கிறார். ஒபாமாவின் விழியில் நுழைந்து இதயத்தில் இடம் பிடித்தார், மிச்செலி என்னும் மாணவி. இரண்டு இதயங்களும் ஒன்றிணைந்த இக்காதல், திருமணத்தில் முடிந்தது. இவர்களுடைய காதல் மண வாழ்க்கையை அங்கீகரிக்கும் விதமாக மாலியா(வயது10), ஷாஷா(வயது7) ஆகிய இரண்டு புதல்விகள் உள்ளனர்.

சட்டப்படிப்பை முடித்த வக்கீலாகவும் சிக்காகோ பல்கலைக்கழக பேராசிரியராகவும் ஒபாமா பணியாற்றினார். கல்லூரி நாட்களிலேயே பல்வேறு அமைப்புகளின் தலைவராகவும், மாணவ பத்திரிகை ஆசிரியராகவும் தலைமைப் பண்பை வளர்த்துக் கொண்டார். அரசியல் ஆர்வம் இயற்கையாகவே ஒட்டிக் கொண்டது.

அதன் விளைவாக, ஜனநாயகக் கட்சி சார்பில் இல்லினாய்ஸ் மாகாணத்திலிருந்து செனட் சபைக்கு 1996 ஆம் ஆண்டும், 2004ஆம் ஆண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போதும் செனட் உறுப்பினராக இருக்கிறார்.

இளமைப் பருவம் முதல் எதிர்ப்புகளையே ஏணியாக கொண்டு முன்னேறிய ஒபாமாவுக்கு ஜனாதிபதிப் பதவியும் சாமானியமாகக் கிடைக்கவில்லை. ஜனநாயக கட்சியின் வேட்பாளராக களம் இறங்க பகீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டாரர். ஹிலாரி, அவருக்கு கடும் சவாலாக இருந்தார்.

பிரசாரத்தின் போது, குடியரசுக்கட்சியில் இருந்து சரமாரியான விமர்சனக் கணைகள் துளைத்து எடுத்தன. முஸ்லிம், கறுப்பு இனத்தவர் என பல்வேறு விமர்சனங்கள். ஆனால், 'நமக்கு தேவை, மாற்றம்' என்ற ஒபாமாவின் கவச(கோஷ)த்தால் அந்தக் கணைகள் அனைத்தும் முனை முறிந்து போயின.

எதிர்க்கட்சி வேட்பாளர் மெக்கைனுடன் நடந்த நேருக்கு நேர் விவாதத்தின் போது ஆணித்தரமான கருத்துக்களை முன்வைத்து மக்களைக் கவர்ந்தார். வேட்பாளர் நிதி திரட்டுவதிலும் அனைத்து சாதனைகளையும் முறியடித்து ரூ10152 கோடி திரட்டினார்.

ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு கிடக்கும் கறுப்பர் இனத்திலிருந்து உலகின் மிகப்பெரிய வல்லரசு நாட்டின் தலைவராக ஒபாமா உயர்ந்து விட்டார். தீவிரவாதம், அணுவாயுதப் பரவல், வறுமை, இனப்படுகொலை ஆகியவற்றை எதிர்கொள்ள புதிய நேச நாடுகளை உருவாக்கவும் ஒபாமா சூளுரைத்திருக்கிறார்.

ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமாவை எதிர்த்து போட்டியிட்ட மெக்கைன், அமெரிக்க இராணுவ அதிகாரி. வியட்நாம் போரில் ஈடுபட்டமையால் 40 ஆண்டுகளுக்கு முன்னர் போர்க் கைதியாக சிறைப்பிடிக்கப்பட்டவர். அதே காலகட்டத்தில் இந்தோனேஷியா பள்ளிக்கூடத்தில் சிறுவனாக ஒபாமா பாடம் படித்துக் கொண்டிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட இருவருமே 40 ஆண்டுகளுக்கு முன்னர் தென்கிழக்கு ஆசியாவில் வசித்து வந்தவர்களாவர்.

புபிராட்டஸ்டண்ட் கிறிஸ்தவரான ஒபாமாவின் முழுப் பெயர், பராக் உசேன் ஒபாமா. அவரது பெயரில் உசேன் என்று இருப்பதால் அவர் முஸ்லிம் என்ற விமர்சனம் எழுந்தது. அதே நேரத்தில், 12 வயது வரை இந்தோனேஷியாவில் இருந்ததால் ஒபாமா அங்குள்ள இந்து சிறுவர்களுடன் சேர்ந்து அனுமனை கடவுளாக வழிபடத் தொடங்கினார்.

## காந்திதாசன் ஒபாமா

வாஷிங்டன்,நவ.07

அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமா, மாகாத்மா காந்தி மீது தீவிர பற்று கொண்டவர்.

காந்தியின் கொள்கையால் பெரிதும் கவரப்பட்டவர் ஒபாமா, வாழ்க்கைக்கான உண்மையான அர்த்தத்தை உணரச் செய்தவர் மாகாத்மா காந்தி என்றும் குறிப்பிட்டுள்ளார்.

செனட் உறுப்பினரான ஒபாமா, தனது அலுவலகத்தில் மாகாத்மா காந்தியின் புகைப் படத்தை வைத்துள்ளார்.

'முன்னர் இந்திய பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், மிக நெருக்கமான இந்திய-அமெரிக்க நண்பர்களைத் தான் பெற்றிருக்கிறார் என தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் கிராம வளர்ச்சிப் பணிகளை தனது தாயார் மேற்கொண்டமையையும் பேட்டியின் போது ஒபாமா நினைவு கூர்ந்துள்ளார். கடந்த ஒக்டோபர் 2ஆம் திகதி காந்தியடிகளின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய ஒபாமா, 'தனது அஹிம்சை கொள்கையில் உறுதியாக இருந்த காந்தியடிகள், அதன் மூலம் நாட்டு மக்களை கவர்ந்து, காலனி ஆதிக்கத்திலிருந்து இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தந்தார். உலக அளவில் காந்தியடிகள் முக்கியத்துவம் வாய்ந்தவர். உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் அவர் மீது பற்றுக் கொண்டுள்ளனர்' என்று தெரிவித்திருந்தார்.

உலக அரங்கில்

## ஒபாமாவின் வெற்றிக் களிப்பில் கென்யாவில் ஒருநாள் விடுமுறை

நைரோபி,நவ.07

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ஒபாமா வெற்றியீட்டியமைக்காக, அவரது தந்தையர் நாடான கென்யாவில், நேற்று வியாழக்கிழமை ஒருநாள் தேசிய விடுமுறை வழங்கப்பட்டது. மக்கள் வெற்றி விழாக் கொண்டாடி குதூகலித்தனர்.

வெற்றிச் செய்தி வெளியானதும் ஒபாமாவின் பிறிதொரு வளர்ப்புப் பாட்டி, தனது இல்லத்துக்கு வெளியே நடனமாடி களித்தார் என பி.பி.சி நிருபர் ஜூலியட் ஜெரி தெரிவித்தார்.


ஒபாமாவின் தந்தையாரின் கிராமமான கோகிலோ, மேற்குக் கென்யாவில் அமைந்துள்ளது. அங்குள்ள மக்களும், ஒபாமா குடும்பத்தைச் சேர்ந்தோரும் இரவிரவாகக் கண்விழித்து, தொலைக்காட்சியில் தேர்தல் முடிவுகளை அவதானித்தார்கள் என்றும் அவர் கூறினார்.

வெற்றி விழாவையொட்டி, மாபெரும் களியாட்ட விழாவை நடத்த கிராம மக்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை ஆபிரிக்க, தென்னாபிரிக்க, சோமாலிய தலைவர்களும் ஒபாமாவுக்கு தம் வாழ்த்துச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளார்கள் என ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஒபாமாவின் சொந்தக் கிராமத்துக் கருகிலுள்ள கிசுமு நகரத்தில் வெற்றி விழாக் கொண்டாடப்பட்டது. மக்கள் வீதிகளில் பாடி, ஆடி குதூகலித்தார்கள். இந்தநகரில் மற்றுமொரு பாரிய விழா நடத்தப்படவுள்ளது. இதில் அரசியல் தலைவர்களும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்றும் பி.பி.சி நிருபர் மேலும் தெரிவித்தார்.

கென்யாவில் நடைபெற்ற தேர்தல் முடிவுகளில் ஏற்பட்ட குளறுபடிகளால், ஜனவரியில் கிசுமு நகரிலும் ஆர்ப்பாட்டங்கள் தலைதூக்கின. பொது மக்களுக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன.

இந்த மோதல்களால் பிரிவுபட்டிருந்த கட்சிகளின் ஆதரவாளர்களும், ஒபாமாவின் வெற்றியால் ஒருங்கிணைந்து, வீதிகளில் ஆடிப்பாடினார்கள் என்றும் ஜூலியட் ஜெரி குறிப்பிட்டார்.



பூட்டானின் புதிய மன்னராக பதவி ஏற்றுள்ள 28 வயதான ஜிக்மே வான்ங் சக்கினையும் அவர் பதவி ஏற்கும் நிகழ்வில் கலந்து கொண்ட இந்தியக் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி நாடாளுமன்ற உறுப்பினர் ராகுல் காந்தி அவரது சகோதரி பிரியங்கா காந்தி ஆகியோர் உட்பட முக்கிய பிரமுகர்களைப் படத்தில் காணலாம்.

## காசாவில் தாக்குதல், 6 தீவிரவாதிகள் பலி

காசா சிட்டி,நவ.07

பாலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேல் மீது மேற்கொண்ட 35 ரொக்கெட் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் முகமாக ஹமாஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டிலுள்ள காசா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் 6 தீவிரவாதிகள் பலியானார்கள். இதையடுத்து தீவிரவாதிகள் தெற்கு இஸ்ரேல் பகுதியின் மீது ரொக்கெட் தாக்குல்கள் மீள மேற்கொண்டார்கள். இவற்றில் எந்தச் சேதமும் ஏற்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த தாக்குதலுக்கு ஹமாஸ் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளனர். எகிப்தின் முயற்சியின் பேரில் கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி முதல் அங்கு போர் நிறுத்தம் நடைமுறையில் இருந்து வருகிறது. அதை மீறி இப்போது தாக்குதல் நடந்துள்ளது.

## நீண்ட நாள் உழைப்பின் பலனே தமது வெற்றி என்கிறார் ஒபாமா

''நான் அடைந்துள்ள வெற்றிக்குக் காரணமானவர்கள் ஆதரவாளர்கள்தான். எனவே அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த வெற்றி ஒரு நாள் இரவில் வந்ததல்ல. நீண்ட நாளைய உழைப்பின் பலன் இன்று வெற்றியாக - மிகப் பெரிய மாற்றமாக அமெரிக்காவுக்குக் கிடைத்துள்ளது''

இவ்வாறு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள பராக் ஒபாமா, சிக்காகோவில் நடைபெற்ற பிரமாண்டமான கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். ஏறத்தாழ 1 இலட்சத்து 25 ஆயிரம் பேர் இதில் கலந்துகொண்டனர்.

ஒபாமா தொடர்ந்து பேசுகையில் கூறியவை வருமாறு :-

''இளையவர், முதியவர், ஏழை, பணக்காரர், குடியரசுக் கட்சியினர், ஜனநாயக்க கட்சியினர், கறுப்பர், வெள்ளையர், இலத்தீன் நாட்டவர், ஆசியர்கள், அமெரிக்க பூர்வக்குடிகள், ஊனமுற்றோர் ஆகியோர் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒரு உண்மையை உலகிற்கு உணர்த்தியுள்ளனர். வெள்ளையர்கள் மட்டுமே அமெரிக்கர்கள் அல்லர், அனைவரும் ஒன்று சேர்ந்த நாடுதான் அமெரிக்கா என்பதை நிரூபித்துள்ளனர்.

''ஜனாதிபதி பதவிக்கு ஒருபோதும் நான் பரிசீலிக்கப்படவில்லை. போதிய நிதியின்றி தேர்தல் பயணத்தைத் தொடங்கினேன். எங்களது தேர்தல் பிரசாரம் வாஷிங்டன் மாளிகையில் தொடங்கவில்லை. மிகப்பெரிய அரங்குகளின் பின்பகுதியில்தான் பிரசாரம் தொடங்கப்பட்டது.

''வெறுமனே வெற்றிபெற வேண்டும் என்பதற்காக என்னைக் கட்சியினர் தேர்ந்தெடுக்கவில்லை. இதை நான் நன்கு அறிவேன். நாட்டின் பொருளாதார நிலையை நீங்கள் நன்கு உணர்ந்திருக்கிறீர்கள். அதனால்தான் இத்தகைய வெற்றியை அளித்துள்ளீர்கள். எதிர்காலத்தில் மிகப்பெரிய சவால்கள் காத்திருக்கின்றன. இதை அமெரிக்கர்கள் உணர்ந்துள்ளனர்.

''இரண்டு யுத்தங்களில் ஒன்று புவி வெப்பமாதல் மற்றையது இந்த நூற்றாண்டின் மிகப்பெரிய நிதி நெருக்கடி, இவைதாம் என்னைத் தேர்ந்தெடுக்க உங்களைத் தூண்டியுள்ளது, 21 மாதங்களுக்கு முன்னர் தொடங்கப்பட்ட தேர்தல் பிரசாரம் தற்போதைய குளிர்காலத்தில் இதமான சூழலைப் போல வெற்றியாகக் கிடைத்துள்ளது.

''இந்த வெற்றி மட்டுமே நீங்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தைக் கொண்டு வந்துவிடாது. இந்த மாற்றத்தின் மூலம் பல மாற்றங்கள் நிகழும் என்பதன் முதல் கட்டமாக இதை நீங்கள் நிகழ்த்தியுள்ளீர்கள். மாற்றத்தை விரும்பாதிருந்தால் இது நிகழ்ந்திருக்காது. இந்த மாற்றம் உங்களால்தான் ஏற்பட்டுள்ளது.

நாம் ஒருவருக்கொருவர் எதிரிகள் அல்லர். அனைவருமே நண்பர்கள்தான். நமது விருப்பங்கள் வேறு வேறாக இருந்தபோதிலும் நம்மிடையே நிலவும் பாசப்பிணைப்புதான் நம்மை இணைக்கிறது. அத்தகையோரின் வாக்குகளாலேயே வெற்றி சாத்தியமானது - இவ்வாறு ஒபாமா இக்கூட்டத்தில் முழங்கினார்.

## கிறிஸ்தவத் தலைவர் பாராட்டு

வத்திக்கான்,நவ.07

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பராக் ஒபாமாவுக்கு, கத்தோலிக்க கிறிஸ்தவ மதத் தலைவரான 16 ஆவது ஆசீர்வாதப்பர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஒபாமாவுக்கு அவர் அனுப்பிய வாழ்த்து மடலில், உலகம் முழுவதும் அமைதி தவழ, நல்லெண்ணம் கொண்டவர்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதனை ஆசீர்வாதப்பரின் செய்தித் தொடர்பாளர் பெட்ரிகோ லம்பார்டி, வத்திகானில் புதன் கிழமை தெரிவித்தார்.

## தாய்லாந்தில் குண்டுவெடிப்பு

பாங்காக்,நவ.06

தாய்லாந்தின் தென்பகுதியில் செவ்வாய்க் கிழமை மூன்று குண்டுகள் வெடித்தன. இச்சம்பவங்களில் உயிரிழப்பு ஏற்படவில்லை. எனினும் 62 பேர் காயமடைந்தனர்.

தாய்லாந்தின் தென்பகுதி மாகாணமான நரதிவாத்தில் ஊடுருவல்காரர்கள் தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகின்றார்கள். 2004 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்பட்டு வந்துள்ள தாக்குதல்களில் இதுவரை 3,300 அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர்.

எனவே, இந்தத் தாக்குதலுக்கும் ஊடுருவல்காரர்களே காரணமாக இருக்கக் கூடும் என தாய்லாந்து பொலிஸ்த் துறை அதிகாரி சுராசய் சூயூசுக் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆஸியுடன் கடைசி டெஸ்டில் சச்சின் சதம்; இந்தியா 5/311

இந்திய - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெறும் 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி மராட்டிய மாநிலம் நாக்பூரில் நேற்று ஆரம்பமானது.

இந்தப் போட்டி இரு அணிகளுக்கும் சவாலான போட்டியாகவே அமைந்திருக்கின்றது. இந்திய அணி தொடரை தன்வசப்படுத்துவதிலும், அவுஸ்திரேலிய அணி இதில் வெற்றிபெற்று தொடரைச் சமப்படுத்துவதிலும் முனைப்புடன் களமிறங்கியிருகின்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்தப் போட்டியில் விளையாட இந்திய அணியின் ஆரம்ப வீரரான கம்பீருக்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதால், விரேந்தர் ஷேவாக்குடன் ஜோடி சேர்ந்து களமிறங்கினார் அறிமுக தமிழ்நாட்டு வீரர் விஜய்.

இதன்படி இருவரும் தமது அசத்தலான ஆரம்பத்தை வெளிப்படுத்தினர். இருவரும் தமக்கிடையே 98 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தபோது 33 ஓட்டங்களுடன் அறிமுக வீரர் விஜய் வட்சனின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் ஹடினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரைத் தொடர்ந்து களமிறங்கினார் இந்திய அணியின் சுவர் என வர்ணிக்கப்படும் டிராவிட். எனினும் இவர் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் கிறெஜ்சாவின் பந்துவீச்சில் ஹடினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார்.

தொடர்ந்து ஷேவாக்குடன் இணைந்துகொண்டவர் சச்சின் டெண்டுல்கர். இவர்களும் தமக்கிடையே குறைந்தளவு ஓட்டங்களைப் பகிர்ந்திருந்த நிலையில், மறுமுனையில் அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்ப வீரர் ஷேவாக் 66 ஓட்டங்களுடன் கிறெஜ்சாவின் பந்துவீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

பின்னர் சச்சினுடன் கூட்டுச் சேர்ந்தார் தனது நூறாவது டெஸ்டில் விளையாடும் வி.வி.எஸ்.லக்ஷ்மண். இந்த இணை அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இருவரும் அணியை சரிவிலிருந்து தூக்கி நிறுத்தினர். தமக்கிடையே 146 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றிருந்தபோது தனது அரைச் சதத்தைக் கடந்திருந்த வி.வி.எஸ். லக்ஷ்மண் 64 ஓட்டங்களுடன் கிறெஜ்சாவின் பந்துவீச்சில் ஹடினிடம் பிடிகொடுத்து வெளியேறினார்.

மறுமுனையில் தனது அசத்தலான ஆட்டத்தைத் தொடர்ந்துகொண்டிருந்த நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கருடன் ஜோடி சேர்ந்தார் சௌரவ் கங்குலி. கங்குலியின் துணையுடன் தனது சதத்தைப் பூர்த்தி செய்தார் டெண்டுல்கர்.

எனினும் சதம் கடந்து சிறிது நேரத்தில் 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஜோண்சனின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்து பெவிலியன் திரும்பினார். அவரது ஆட்டமிழப்பைத் தொடர்ந்து களம் புகுந்தவர் அணியின் தலைவர் டோனி.

பந்துவீச்சில் ஆஸி. அணி சார்பாக கிறெஜ்சா சிறப்பாகப் பந்துவீசி 3 விக்கெட்டுக்களையும், ஜோண்சன், வட்சன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

டோனி 4 ஓட்டங்களுடனும், கங்குலி 27 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தபோது நேற்றைய முதலாம் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

ஆட்டம் நிறுத்தப்படும்போது இந்திய அணி 5 விக்கெட் இப்பிற்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டத்தின் இரண்டாம் நாள் இன்றாகும்.

## நெல்சன் சாரதி பயிற்சி பாடசாலை

சகல விதமான வாகனங்களுக்கும் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்கப்படும். 01.11.2008 முதல் எமது கிளை நிறுவனம் பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அங்கே பயிற்சியும் அளிக்கப்படும்.

**நெல்சன் லேனேர்ஸ்**

பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.

இல. 109 Y.M.C.A. கட்டிடம்,
கச்சேரியடி, யாழ்ப்பாணம்.

## ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

சுன்னாகம்

### நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும்

காலம்: இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு
இடம்: ஒறேற்றர் மண்டபம்
தலைவர்: திரு. ஆறு. திருமுருகன் (அதிபர்) அவர்கள்

பிரதம விருந்தினர்
பேராசிரியர் நா.சண்முகலிங்கன் அவர்கள்
(துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்)

சிறப்பு விருந்தினர்கள்
கலாநிதி சதாசிவம் கனகசபை அவர்கள்
(இளைப்பாறிய பொறியியலாளர்)
கலாநிதி சிவபாதநாயகி கனகசபை அவர்கள்

நிறுவுநர் நினைவுப் பேருரை
கலாநிதி சதாசிவம் கனகசபை அவர்கள்

கௌரவ விருந்தினர்
திரு.க.சிவாஜி அவர்கள்
(இளைப்பாறிய அதிபர்)

பரிசில் வழங்குதல்
திருமதி கௌரி சண்முகலிங்கன் அவர்கள்
(ஆசிரியை வேம்படி மகளிர் கல்லூரி)
நிறைவுரை திரு.சி.மகேந்திரன் அவர்கள்
(பிரதி அதிபர்)

பழைய மாணவர்கள், பாடசாலை அபிமானிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(79687)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

## யா/ஏழாலை ஸ்ரீ முருகன்வித்தியாலயம்

### நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும் - 2008

இடம்:- வித்தியாலய பிரதான மண்டபம்.
காலம்:- இன்று 07-11-2008 வெள்ளிக்கிழமை மு.ப 8.30 மணி.
தலைவர்:- திரு மு.செல்வஸ்தான் (அதிபர்)

முதன்மைவிருந்தினர்
உயர்திரு. க. தேவராஜா அவர்கள்
(வணிகபீடாதிபதி, யாழ்.பல்கலைக்கழகம்)

வாழ்த்துரை
திரு. செ. குபேரநாதன் அவர்கள்
(கோட்டக் கல்விப்பணிப்பாளர் - உடுவில்)

நிறுவுனர் நினைவுப் பேருரை
திரு.பொ.நாகரட்ணம் அவர்கள்
(ஆசிரிய ஆலோசகர் விஞ்ஞானம் - வலிகாமம் கல்வி வலயம்)

பரிசில் வழங்கல்
திருமதி.இ.தேவராஜா அவர்கள்

நிறைவுரை
திரு.க.அபராசுதன் அவர்கள்
(பழைய மாணவர்சங்கச் செயலர்)

(A)

-அதிபர்-

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில் நிகழ்ச்சித் திட்ட உதவியாளராகக் கடமையாற்றும்
**திருமதி கிருஷாந்தி உமாசங்கர்**
அவர்களின் பாசமிகு தாயார்
**திருமதி சரஸ்வதிஅம்மா பரமலிங்கம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

நல்லூர்ப் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள்
நலன்புரிச் சங்கம்.

(79695)

# இந்திய வீரர் நரங் உலக சாதனை!

உலகக் கோப்பை துப்பாக்கி சுடும் போட்டியில் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்திய வீரர் ககன்நரங் உலக சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

உலக கோப்பை துப்பாக்கி சுடும் போட்டி தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் நடந்து வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த ஆண்களுக்கான 10 மீட்டர் ஏர்ரைபிள் பிரிவில் இந்தியாவின் முன்னணி வீரர் ககன் நரங், பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற சீன வீரர் சூ கீனன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். இதனால் போட்டி கடும் சவாலாக இருந்தது.

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் இறுதிப் போட்டி வாய்ப்பை மயிரிழையில் இழந்த இந்திய வீரர் ககன்நரங் தொடக்கம் முதலே அபாரமாக செயல்பட்டு இலக்கை குறித வறாமல் சுட்டார். தகுதிச் சுற்றில் 600-க்கு 600 புள்ளிகள் குவித்த அவர் இறுதி சுற்றில் 103.5 புள்ளிகள் குவித்தார். இதன் மூலம் மொத்தம் 703.5 புள்ளிகள் பெற்ற ககன்நரங் தங்கப்பதக்கம் வென்றதுடன் உலக சாதனையும் படைத்தார். அமெரிக்க வீரர் மாத் எம்மன்ஸ் (702.5 புள்ளிகள்) வெள்ளிப்பதக்கமும், சீன வீரர் சூ கீனன் வெண்கலப்பதக்கமும் பெற்றனர்.

இதற்கு முன்பு 2006ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஸ்பெயின் நாட்டில் உள்ள கிரனடாவில் நடந்த உலகக் கோப்பைப் போட்டியில் ஆஸ்திரிய நாட்டு வீரர் பார்னிக் தாமஸ் 703.1 பெற்றதே உலக சாதனையாக இருந்தது. அதனை ககன்நரங் நேற்று முன்தினம் தகர்த்து புதிய சாதனை படைத்தார்.

## தவறிவிட்டது

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், என்னும் முகவரியுடைய தில்லையம்பலம் தெய்வசோதி என்பவரது தேசிய அடையாள அட்டை (526834798V) மற்றும் விசேட அடையாள அட்டை பணிநிலை அ.அட்டை என்பன அடங்கியன I.C கவர் உடன் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேல்குறிப்பிட்ட முகவரியில் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

**அமரர் செல்வி நாகலிங்கம் பரிமளம்**

28.09.2008 இல் சிவபதமடைந்த அமரர் செல்வி நாகலிங்கம் பரிமளத்தின் மரணச்செய்தி கேட்டுஉதவிகள் பல புரிந்த நண்பர்களுக்கும் அனுதாபங்களை எம்மோடு பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக்காக இன்று (07.11.2008)வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் பங்குபற்றி அதன்பின்னர் சங்கானை கூடத்து அம்மன் கோவிலில் இடம்பெறும் அவரது நினைவான அன்னதானத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அறிவித்லை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூடத்து மனோன்மணி ஆலயம்,
சங்கானை.

(சி)

தகவல்:
பரிபாலன சபை.

## விண்ணக வாழ்வின் 31 ஆம் நாள் நினைவுகூரல்

மண்ணகத்தில்
20 ★ 11 ★ 1975



விண்ணகத்தில்
08 ★ 10 ★ 2008

**அமரர் இராசையா அருள்நந்தினி**

காத்திருந்த கனவுகள் காற்றாய் பறந்தது - அக்கா
காலெமெல்லாம் தவிக்க விட்டு
கண்ணீருடன் நாம் வாழ
கலைந்து விட்டீர் எம் கூடு விட்டு.

"பவளகிரி"
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### இலங்கையர் குகநாதன்

வரணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கையர் குகநாதன் 05.11.2008 புதன்கிழமை காலமானார்.

அன்னார் இலங்கையர் - தில்லைநாயகி தம்பதியினரின் அன்பு மகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், தர்சிகன் (யா/ இராமநாதன் கல்லூரி), மதுஷா ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. திருமதி நடராசா தம்பதியினரின் மருமகனும், விஜயநாதன் (லண்டன்), ரவீந்திரநாதன் (கனடா), சாந்தநாயகி (ஆசிரியை, யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் பவளகுமாரன் (அதிபர், யா/கைதடி முத்துக்குமார சுவாமி வித்தியாலயம்), அகிலா (லண்டன்), கவிதா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் கைதடியிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஊத்தல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தெற்கு,
கைதடி.
தொ.பே.0602211220

தகவல்:
சி.பவளகுமாரன்
(மைத்துனர்)

### இளையதம்பி கந்தையா (ஓடலி மணியம்)

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற பரிசாரகர் இளையதம்பி கந்தையா நேற்று (06.11.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான இளையதம்பி- குட்டிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் அமரர்களான இராசையா- செல்லம்மா தம்பதியினரின் இரண்டாவது மருமகனும் பிறேமதாஸ்(லண்டன்), பிறேம்குமார்(லண்டன்), பிறேமாயினி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் லீலாவதி மற்றும் ஜெயராணி ஆகியோரின் மைத்துனரும் அமரர் நாகரத்தினம், இராமலிங்கம் ஆகியோரின் சகலனும் இரடாஜலக்ஸ்மி, சிவலோகநாதன், யோகமலர், அமரர் இராஜதுரை ஆகியோரின் மாமனாரும், ஜெகநாதன் (பிரேத சபை, ஏழாலை), லோகநாதன்(சுவிஸ்), விஜயநாதன்(கனடா), புஸ்பநாதன்(லண்டன்), குலநாதன்(கனடா), வனிதா (பிரான்ஸ்), சுனிதா(கொழும்பு) ஆகியோரின் சிறிய தந்தையும் கரிஸ்தரன், ஆர்த்திகா ஆகியோரின் அப்பப்பாவும், அரன்சிகா, அருண்மியா ஆகியோரின் அம்மப்பாவும், கோபிகா, கோவர்த்தினி, கோர்சிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் குப்பிளான் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (07.11.2008) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குப்பிளான்.

தகவல்:
நா.ஜெகநாதன்
(சிறி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் தமிழர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

கோலாலம்பூர், நவ.7

இலங்கையில் நடக்கும் இனப் படுகொலையைக் கண்டித்து மலேசிய இலங்கைத் தூதரகத்தின் முன்பாக இருநூறுக்கு அதிகமான மலேசியாவில் உள்ள இந்தியக் காங்கிரஸ் இளைஞர்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் ஆதரவாளர்கள் நேற்று வியாழக்கிழமை அமைதி மறியலில் ஈடுபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலேஷியாவில் ஜாலான் அம்பாங்குடன் இணைந்துள்ள ஜாலான் டாமையிலில் இலங்கை தூதரகம் உள்ளது. இதன் முன்னே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இம்மறியலுக்கு மலேசிய இந்தியக் காங்கிரஸ் இளைஞர் பிரிவுத் துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.முருகேசன் மற்றும் ஆலோசனை மன்றத் தலைவர் எஸ். ரமேஷ் தலைமை வகித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் குண்டு வீச்சுத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் மற்றும் இடிந்து கிடக்கும் வீடுகளைக் காட்டும் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்தி நின்றனர். மேலும் கறுப்புப் பட்டிகளையும் அணிந்திருந்தனர்.

மறியலில் ஈடுபட்டிருந்தவர்கள் வழங்கவிருந்த மனுவை இலங்கைத் தூதரக அதிகாரிகள் வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டனர்.

இலங்கையிலிருந்து வரும் பொருள்களையும் இலங்கை விமான சேவையையும் மலேசிய மக்கள் புறக்கணிக்கக் கோரும் பரப்புரை ஒன்றை விரைவில் மேற்கொள்ளப்படும் எனவும் இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை வகித்த எஸ்.முருகேசன் கூறினார். (அ-சி)

## யால வனப்பகுதியில் அதிரடிப் படையினருடன் விடுதலைப்புலிகள் மோதல்

அம்பாந்தோட்டை, நவ. 07

அம்பாந்தோட்டை யால வனப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொமாண்டோ அணியினருக்கும் விசேட அதிரடிப்படையினருக்கும் இடையில் நேற்று நேரடி மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. அதில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டனர். இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் விசேட அதிரடிப்படையினர் மீது தமது அணியினர் திடீர் தாக்குதலை அணியினர் மேற்கொண்டனர் என்றும் சுமார் 30 நிமிடங்கள் வரை இச்சமர் நீடித்திருந்தது என்றும் இம் மோதலிலேயே அதிரடிப் படையினர் இழப்புகளைச் சந்தித்தனர் என்றும் புலிகள் தரப்பில் கூறப்பட்டது.

இத்தாக்குதலை நடத்திய தமது அணியினர் எவ்வித இழப்புமின்றி தளம் மீண்டனர் என்றும் புலிகள் தரப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## வன்னியிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறைக் கடலில் வைத்து நேற்று முன்தினம் கடற்படையினரால் பிடிக்கப்பட்ட 28 பேரும் இந்த முகாமுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸாரால் நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட இவர்களை தெல்லிப்பழை நலன்புரி நிலையத்தில் தங்க வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ-1)

## பாதுகாப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதன் மூலம் பொருளாதாரத்தை அபிவிருத்திச் செய்யலாம். எனவே, அதற்காகப் பாதுகாப்புச் செலவுக்கான நிதியை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவதற்கான அவசரம் முன்னதை விட தற்போது அதிகமாகவுள்ளது என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

''தொடர்ந்து யுத்தம் நடைபெற்று கொண்டிருக்கும் எந்த நாடும் முன்னேற முடியாது. இதன் காரணமாக கடுமையான நிலைப்பாட்டை எடுத்து அதனை முடிவிற்கு கொண்டு வரவேண்டிய தேவை உள்ளது'' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

## காலையில் வீடு புகுந்து சிறுவர்கள் மீது சூடு கொம்மாந்துறையில் புதனன்று சம்பவம்

மட்டக்களப்பு, நவ.7

மட்டக்களப்பு கொம்மாந்துறைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிறுபிள்ளைகள் இருவர் படுகாயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த ஆயுததாரிகள் சிறுவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றனர் எனப் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் குலேந்திரன் தேவிகா என்ற ஒன்றரை வயதுக் குழந்தையும், சிவசூரியன் என்ற எட்டு வயதுச் சிறுவனும் படுகாயமடைந்துள்ளனர் எனவும், இவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம்தொடர்பில் ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

## படையினருடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ. வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து தமிழிலும் விசேட உரையாற்றிய போதே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அவர்அப்போது சொன்னதாவது:

கொடூரமான பயங்கரவாதிகளின் துப்பாக்கிகளுக்குப் பயந்து வாழுகின்ற கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவுப் பிரதேச அப்பாவி மக்களை நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். அவர்கள் இதுவரை பட்ட கஷ்டங்கள் போதும்.

அந்த அப்பாவி மக்களின் வாழ்வை சுபீட்சமாக்க வேண்டும். அவற்றை விரைவாக நிறைவேற்றும் வரை அங்கே வாழும் எமது சகோதர மக்கள் பொறுமையுடன் செயற்படுவார்கள் என்று நம்புகிறேன்.

பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களைப் பிரயோகித்து வருவது மனித நேயத்தின் பெயரால் உங்களை மீட்பதற்காகவே. எனவே, அவர்களுடன் ஒன்று சேருமாறு அப்பாவி மக்களிடம் நான் வேண்டுகோள் விடுக்கிறேன் என்று கூறினார். (அ-சி)

## வைகோ,...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராக பேசினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இலங்கைக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடவும் தயங்கமாட்டோம் என்று வைகோவும், தனித் தமிழ்நாடு விரைவில் உருவாகும் என்று மு. கண்ணப்பனும் இக்கூட்டத்தில் பேசினார்கள்.

இதைனையடுத்து இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிராக பேசினர் என இவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அதன் அடிப்படையில் சென்னையில் வைகோவும், கோவையில் கண்ணப்பனும் கைது செய்யப்பட்டு ஜோர்ஜ்டவுன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டனர். அவர்கள் இருவரையும் 15 நாள்கள் சிறைக்காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்கு இணங்க இருவரும் புழல் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். (சி)

## வலிகாமம் வலயத்தில் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 07

வலிகாமம் கல்வி வலய ஓவியக் கண்காட்சி நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் முற்பகல் 10 மணிமுதல் இடம்பெறவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இக்கண்காட்சியில் பிரதம விருந்தினராக நுண்கலைப்பீட விரிவுரையாளர் வை.சிவசுப்பிரமணியம் கலந்து கொள்வார். (1)

## பட்ஜெட்டுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநடப்புச் செய்தனர்.

சம்பந்தன் எம்.பி.சமர்ப்பித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஸ்ரீலங்காவின் வடக்கு - கிழக்கு நிலப்பரப்பில், தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களுக்குள் அரசு தொடர்ந்து விமானக் குண்டு வீச்சுக்கள், பல்குழல் எறிகணைத் தாக்குதல் மற்றும் ஏனைய இராணுவ நடவடிக்கைகளுடன் நடத்தும் கொடூரமான யுத்தத்தினால், தமிழ் பொது மக்கள் கொலை செய்யப்பட்டு அழிக்கப்படுவதுடன் காயங்களுக்குள்ளாகியும் வருகின்றனர்.

மேலும் தமிழர் தாயகப் பிரதேசம் நிர்மூலமாக்கப்பட்டு நாசப்படுத்தப்பட்டு வருவதன் மூலமும், இலட்சக்கணக்கான தமிழ் குடிமக்களை, இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயரச் செய்து, ஓர் இனச் சுத்திகரிப்பை மேற்கொண்டு வருவதன் மூலமும் ஸ்ரீ லங்காஅரசு தமிழ்த் தேசிய இனத்தின் மீது தொடர்ச்சியாக இனப் படுகொலையை நடத்தி வருகின்றது.

இந்தக் கொடூரமான யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு, ஸ்ரீ லங்கா அரசு 2009 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவில், மிகப் பெருந் தொகைப் பணத்தைக் கோருகின்றது.

இந்தக் கொடூரமான யுத்தத்துக்கு எமது கடும் எதிர்ப்பையும், உறுதியான கண்டனத்தையும் தெரிவிக்கும் முகமாக, கௌரவ நிதியமைச்சர் அவர்கள் தமது வரவு செலவுத்திட்ட உரையை நிகழ்த்த ஆரம்பிக்கும் பொழுது, இலங்கைத் தமிழரசுக்கட்சி (தமிழ் தேசியக் கூட்டமைப்பு) நாடாளுமன்ற உறுப்பினர்கள், இவ்வுரையை பகிஷ்கரித்து சபை அமர்வில் இருந்து வெளிநடப்பு செய்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## குடாநாட்டில் எரிபொருள்களின் புதிய விலைகள்

யாழ்ப்பாணம், நவ. 07

குடாநாட்டில் எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் குறைக்கப்பட்டுள்ளன என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய முகாமையாளர் எஸ். சண்முகநாதன் நேற்றிரவு தெரிவித்தார்.

எரிபொருள்களின் பழைய விலைகளும் புதிய விலைகளும் வருமாறு:

**புதிய விலை**

பெற்றோல்- 152.50சதம், டீசல் - 88.60சதம், மண்எண்ணெய் - 68.60சதம்.

**பழைய விலை**

பெற்றோல்- 167.50சதம், டீசல் - 118.60சதம், மண்எண்ணெய் - 88.60சதம். (அ-1)

## குடாநாடு எங்கும் நாளை மின் வெட்டு

யாழ்ப்பாணம், நவ. 07

சுன்னாகம் பிரதான மின் வழங்கல் வலைப்பின்னலில் அவசர திருத்த வேலை.காரணமாக நாளை சனிக்கிழமை குடாநாடு முழுவதும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் . மின்சாரசபை பிராந்திய அலுவலகம் இதனை அறிவித்துள்ளது.

காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை மின் தடை நடைமுறையில் இருக்கும் என்றும் திருத்த வேலைகள் எதிர்பார்க்கப்படும் நேரத்திற்கு முன்னதாக முடிவடைந்தால் மின்விநியோகம் உடனடியாக வழங்கப்படும் என்றும் மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-1)

## பரந்தனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்திருப்பவை வருமாறு:

பரந்தன் நகருக்கு வடக்கில் உள்ள கண்டி வீதியின் 161ஆம் கட்டை மக்கள் குடியிருப்புகள் மீது நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் அரச விமானப்படையின் மிக் - 27 ரக விமானங்கள் இரண்டு குண்டுத்தாக்குதலை நடத்தின.

நான்கு தடவைகள் நடத்தப்பட்ட இக் குண்டுத் தாக்குதலில் வீதியால் சென்று கொண்டிருந்த அப்பகுதி மக்கள் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

பரந்தன் நகரில் உள்ள வணிக நிறுவனங்களில் பொருள்கள் வாங்குவதற்காக நின்ற மக்கள் பஸ்ஸுக்காகக் காத்துநின்ற மக்கள் என அனைவரும் பேரவலப்பட்டு சிதறி ஓடினர்.

பரந்தன் நகரப்புறத்தில் குண்டுத் சிதறல்கள் வீழ்ந்ததில் மூதாட்டி உட்பட நால்வர் படுகாயமடைந்தனர். ஏனையவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். கால் நடைகள் புல உயிரிழந்தன. நான்கு வீடுகள் அழிந்துள்ளதுடன் 11 வீடுகள் சேதமடைந்துள்ளன. க.சசிகரன் (வயது - 16), சி.நவநீதன் (வயது - 18), ம.பரமேஸ்வரி (வயது - 57), மே.தங்கேஸ்வரி (வயது - 36) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். ஏனைய எட்டுப்பேரும் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கிளிநொச்சி பரந்தனில் உள்ள விடுதலைப் புலிகள் ஒன்றுகூடும் இடம் ஒன்றின்மீதே இந்த விமானத் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படையின் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார். அத்துடன், இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ-சி)

G.A.Q பேராதனை (வெளிவாரி)

★A/L இல் கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் ஆகிய பிரிவுகளில் ஒன்றில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் ஆகும்.
★ பல்கலைக்கழக பதிவுகளை எமது நிறுவனத்தினூடாக செய்து கொள்ளலாம்.
★ இவற்றுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

குறிப்பு:-
(1) G.A.Q யாழ். பல்கலைக்கழகம்(வெளிவாரி) புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
(2) 2007 ஆம் ஆண்டுG.A.Q (பேராதனை) பரீட்சை எடுத்து சித்தி அடைந்த மாணவர்களுக்கான B.A இறுதியாண்டுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.
(3) 2007 ஆம் ஆண்டு G.A.Q (யாழ்.பல்கலைக்கழகம்) பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான கலைமாணி I (PARTI)

விரிவுரைகள் ஆரம்பம்:-08.11.2008(காலை 8 மணி)

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.

S. அருள்நங்கை (நிர்வாகி)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
#07, KANPOLLAI LANE, KODIKAMAM RD, NELLIYADI

நெல்லியடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிளைநிறுவனத்தில் 06ம் 07ம் 8ம் திகதிகளில் பதிவுசெய்யும் மாணவர்களிற்கு விசேடகட்டணக்கழிவு வழங்கப்படுகின்றது.

9மணிமுதல் 02மணிவரை பதிவுகள் மேற்றுக்கொள்ளப்படும்.

10ம் திகதியிலிருந்து வகுப்புக்கள் ஆரம்பமாகும்.

கிறிஸ்தவம்
A/L 2010
நான்கு வடிவ நற்செய்திகள்
Sat, Sun - 11 - 12pm
A/L 2009
புனித பவுலின் நிருபங்கள்
Sat, Sun - 12 - 1pm
ஆரம்பம்:- 08.11.2008(Sat)
S.K.நபர்
NEC
Clock Tower Road, Jaffna

கணக்கீடு
A/L:- 2009 கம்பனி
புதிய பிரிவு ஆரம்பம் நாளை 7A.M
A.L:- 2009
காசுப் பாய்ச்சல் கூற்று
ஆரம்பம் நாளை 5P.M
A.L:- 2010
கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம் நாளை (8.11.08) 4P.M
S.துவா
UNIVERSAL

கடந்த September மாத CBF, DBF பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.
CBF, DBF கற்கைகளுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம் - 08.11.2008
CBF - sat, sun -3pm
DBF - sat, sun -4pm
CBM (வங்கித்துறைக் கற்கைகள் நிறுவனம்)
33, கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். T.P: 222 6196, 0777110756
இயக்குனர்: N.Umakanth

PAPER CLASS
தமிழ்
திரு.குழந்தை
ஆரம்பம்
சனி ஞாயிறு 7A.M
★ தனிப்பாட அனுமதி
★ வெளிமாணவருக்கும் அனுமதி
யூனிவேர்சல்

PHYSICS
A.L 2010
Sound
B-I - Sat, Sun - 6.00 - 7.00 a.m
B-II - Sat, Sun - 7.30 - 8.30 a.m
ஆரம்பம்:- 08.11.2008 (Sat)
K.Selvan
NEC
Clock Tower Road, Jaffna

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org